RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்



வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086


வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage


GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL


மலர்:- 29, 10 யூன் 2022 இதழ்:- 07

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: TK பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd,
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca


பட்டினியை நோக்கி....


புலம்பெயர்ந்த தமிழர்கள் எப்போது முதலீடு செய்ய வருவார்கள்?

ரணிலின் அரசியல் சதுரங்கம்?


# தோல்வியடைந்த ஜனாதிபதியாக வீடு செல்ல விரும்பாத கோட்டபாய விருப்பம் சாத்தியமா?

நாடு இன்று இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதற்கு பெருமளவு பொறுப் பேற்க வேண்டியவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தான். தனி மனிதராக அவர் இழைத்த தவறுகள் தான் இந்த நிலைமைக்கு முழுக் காரணம். அதனால் அவர் உடனடியாகப் பதவி விலக(7ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins
Manulife
Foresters



# பட்டினி அபாயம் மேலோங்கிய நாடுகளின் பட்டியலில் இலங்கை!

ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பு, ஐக்கிய நாடுகள் உலக உணவுச் செயற்திட்டம் ஆகிய இரு அமைப்புக்களும் இணைந்து வெளியிட்டுள்ள பட்டினி அபாயம் மேலோங்கிய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்விரு அமைப்புக்களும் இணைந்து எதிர் வரும் ஜூன் செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் உணவு ப்பாதுகாப்பு நிலை எத்தகையதாகக் காணப் படும் என்பது குறித்து வெளியிட்டுள்ள 'பட்டினி மேலோங்கல் (5ம் பக்கம் பார்க்க)



BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# 30 வருட இனமோதல் தொடர்பாக எவரும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை! நல்லிணக்கம் எங்கே வரும்?

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE


கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




18 Years Real Estate Experience


HOMELIFE HIGHER STANDARDS

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Central Park / Bramalea Rd

**Brampton** $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Yonge & Finch

**Toronto** $798,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony


### Kennedy & Progress


**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Markham Rd/16th Avenue

**Markham** $825,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Freshly Renovated Penthouse

### Westney & Rands

**Ajax** $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Lovely Kitchen W/Quartz Cou.top

### Torbram & Bovaird

**Brampton** $995,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Ideal For Principal Residence

### Taunton/ Anderson

**Whitby** $1,299,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Hardwood Floors, Fin. Basement

### Bellamy & Lawrence

**Scarborough** $1,099,999
Bedrooms: 3+2 Washrooms: 4
$$$ Spent On Upgrades

### Torbram & Bovaird

**Brampton** $1,300,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Ideal For Principal Residence

### Wood Pkwy/ Edenbrook Hill

**Brampton** $1,299,000
Bedrooms: 3 Washrooms: 3
Open Conceptl/O For Entertaining!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### 9th Line & Steeles

**Markham** $999,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Reno. With Many Upgraded

### Markham & Ellesmere
FOR LEASE

**Scarborough** $2,750
Bedrooms: 2+1 Washrooms: 2
Corner Unit, Open Concept Layout

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 - 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# 30 வருட இனமோதல் தொடர்பாக எவரும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை! நல்லிணக்கம் எங்கே வரும்?

சிங்கள பௌத்த கேடயத்தை அதன் அதிகபட்ச நன்மைக்காக அரசாங்கம் பயன்படுத்தியது.

இந்த அரசாங்கம் குண்டர் போன்ற பிக்குகளை வளர்த்தெடுத்து அவர்களு க்கு பதவி உயர்வு அளித்து பல்வேறு இடங்களில்அமர்த்தியிருந்தது.

சில பிக்குகள் உளவியல் ரீதியாக கடுமையான ரணங்களைக் கொண்டிரு க்கின்றனர்.

குடும்ப வன்முறை, துன்புறுத்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற வற்றை சமூகம் குணப்படுத்தவில்லை என்றால், அது அதிகரிக்கும்.

நல்லிணக்கம் என்பது கருத்தரங்கு களை நடத்துவது, அறிக்கையை வழங்குவது மற்றும் டொலர்களை சம்பாதிப்பதாகவிருந்தது.

பொறுப்புக்கூறல் என்பது அரசியலமை ப்புச் சட்டத்திலோ அல்லது நீதி முறை மையிலோ சேர்க்கப்படவில்லை.


நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் முளை விடுகிறது.

வண. கல்கண்டே தம்மானந்த தேரர் தற்போது பௌத்த கற்கைகளுக்கான வல்பொல ராகுல நிறுவனத்துக்கு தலைமை தாங்குவதுடன் சமூக நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய பன்மைத் துவ சமூகத்தை ஊக்குவித்து வருகின் றார். உதாரணமாக போரின் உச்சக் கட்டத்தின் போதான பல்வேறு அனுப வங்களை சேகரித்திருக்கும் அவர் தனது வாழ்நாளில் பல்வேறு சம்பவங் களை எதிர் கொண்டுள்ளார். வண. தம்மானந்த தேரர் சில காலமாக சமூக ரீதியில் குணப்படுத்தல் முறை பற்றி போதித்து வருவதுடன் பெரும்பாலான மக்கள் பின்பற்றும் மரபுவழி பௌத்த அணுகுமுறைகள் புத்தரின் போதனை களிலிருந்து திசை திருப்பப்பட்டதன் விளைவாக சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் அவர் முழு அளவில் குரல் கொடுத்துள்ளார். நாம் ஒரு காயப்பட்ட சமூகம். ரணங்கள் ஆறாத ஒரு சமூகத்தால் காயங்கள் மூலம் தீர்வைத் தேட மட்டுமே தெரியும் என்று அவர் டெய்லி மிரர்' பத்திரிகை க்கு அளித்த பேட்டியில் தெரிவித்திரு க்கிறார்.

கேள்வி: தற்போதைய அரசாங்கம் சிங்கள பௌத்த சித்தாந்தத்தை வாக்குகளைப் பெறுவதற்கு கேடயமாகப் பயன்படுத்தி யது. உங்கள் அவதானிப்புகள் என்ன?

பதில்:- தற்போதைய ஆட்சி மற்றும் அடுத்தடுத்து இருந்து வந்த ஆட்சிகள் சிங்கள பௌத்த சித்தாந்தத்திற்கு அடி பணிந்துள்ளன. ஆனால் இம்முறை அது ஆபத்தான முறையில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக பயன்படுத்தப்பட் டது. அவர்கள் முஸ்லிம்களை அச்சுறு த்தலாக சித்திரித்து சிங்கள பௌத்தர் களை ஒன்றாகவும், ஏனைய இனத்தவர் களை எதிரிகளாக்கவும் இந்த அரசாங் கம் சிங்கள பௌத்த கவசத்தை அதிக பட்ச நன்மைக்காகப் பயன்படுத்தியது.

கேள்வி: ருவன்வெலிசாயாவில் ஜனாதிபதி எவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் என்பதையும் மே 9ஆம்



திகதிக்கு முதல் நாள் முன்னாள் பிரதமர் அநுராதபுரத்திற்கு விஜயம் செய்திருந் தார் என்பதையும் நாம் பார்த்தோம். ராஜபக்ஷாக்கள் பௌத்தத்தை ஆயுத மாகப் பயன்படுத்தியதாக நீங்கள் நினை க்கவில்லையா?

பதில்:-நான் எப்படி பார்க்கிறேன் என்றால் அவர்கள் மதத்தை எந்த மரியாதையும், நெறிமுறையும் இல்லாமல் பயன்படுத்தி னார்கள் என்பதாகும் முஸ்லிம் சமூகத் தைப் பற்றி தவறான தகவல்களை பரப்பு வதற்காக, அவர்கள் பிக்குகளுக்கு பட்ட றைகளை நடத்தினர். இந்த பட்டறை களில், போகோ ஹராம் பற்றிய வீடியோக் களையும், இஸ்லாமிய தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வீடியோக் களையும் அவர்கள் காண்பித்தனர். அதன் பிறகு, பிக்குகள் தங்கள் பான பிரசங்கங்களிலிருந்து இஸ்லாமிய தீவிர வாதத்தைப் பற்றி பேசுவதற்கு சுமார் 10-15 நிமிடங்கள் ஒதுக்குமாறு அறி வுறுத்துவார்கள். இது தேர்தலுக்கு பல மாதங்களுக்கு முன்பு செய்யப்பட்டது. பல்வேறு வெளிமாநிலங்களில் உள்ள பல பிக்குகள் இது குறித்து என்னிடம் புகார் அளித்துள்ளனர், தீவிரவாதம் பற்றி பேசுவதற்கு தங்கள் பிரசங்கங்களில் இருந்து சிறிது நேரம் ஒதுக்கியதாக அவர்கள் ஒப்புக் கொண்டனர். பிரசங்கம் இந்த மாதிரியாக ஒரு போதும் தவறாக பயன்படுத்தப்படவில்லை. ஒரு சாமானி யர் ஒரு பிக்குவை தனது வீட்டிற்கு வரவழைக்கிறார். பௌத்தம் இவ்வாறான வன்முறையில் பயன்படுத்தப்படுவதை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. அவர்கள் குண்டர் போன்ற பிக்குகளை வளர்த்து, அவர்களுக்கு பதவி உயர்வு அளித்து பல்வேறு இடங்களில் அமர்த்தி னார்கள்.

கேள்வி: பல முன்னணி பௌத்த பிக்கு களும் தற்போதைய அரசாங்கத்தை ஆதரித்தனரே? ...

பதில்:- பல பௌத்த பிக்குகள் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தினார்கள். பின்னர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்தன, அவர்கள் எதனை பிரசங்கித் தார்களோ அது யதார்த்தமாகியது. இது எதிர்பாராத தருணத்தில் நடந்தது. அதனால் அச்சம் ஏற்பட்டது, மக்களு க்கு பாதுகாப்புமற்றும் அவர்களைப் பாதுகாக்க எவராவது தேவைப்பட்டனர்.

கேள்வி: நல்லிணக்கம் பற்றிப் பேசும் போது வடக்கு கிழக்கு பற்றி மட்டுமே பேசுகிறோம். தென்னிலங்கையிலும் இது போன்ற சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால் இன்று, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகங்கள் போன்றவை திறமையாகச் செயற்படவில்லை. உங்கள் கருத்துகள் என்ன?

பதில்:- கடத்தல்களும் கொலைகளும் நாளுக்கு நாள் அரங்கேறி வருகின்றன. எனக்குத் தெரிந்த மூன்று பிக்குகள் இவ்வாறு கடத்தப்பட்டனர். அவர்களில் ஒருவர் தெஹிவளையில் வைத்து கடத்தப்பட்டார். பொடி ஹமுதுருவோ' பேருந்தில் இருந்த போது கடத்தப்பட்ட தாக நேரில் பார்த்த ஒருவர் என்னிடம் கூறினார். இன்று வரை, அவர் எங்கிரு க்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. தெனகம பன்னலோக, கொரடிகும்புரே ஞானலோக என்ற இரண்டு பிக்குகளும் கடத்தப்பட்டு இன்றுவரை காணாமல் போயுள்ளனர். அவர்களைப் பற்றி யாரும் பேசுவதில்லை. அன்புக்குரியவர்கள் காணாமல் போனவர்களின் சுவாசத்துக்கு ஒரு வண்ணம் கொடுக்க முடிந்தால், இந்தச் சூழ்நிலை எவ்வளவு இருண்ட தாக இருக்கிறது என்பதை நாம் பார்க்க முடியும்.

இது ஒரு வெகுஜன புதைகுழி போன் றது, ஆனால் நாங்கள் தொடர்ந்து சாம் பிராணி குச்சிகளை ஏற்றி முன்னேறு கிறோம். இந்த நினைவுகளை மறக்க முயற்சிக்கிறோம். அந்த சம்பவத்தை யார் வேண்டுமானாலும் மறக்கலாம் ஆனால் அந்தச் சம்பவத்தின் விளை வான நினைவுகளை மறக்க முடியாது. இந்த காயப்பட்ட ஆட்களை சாரதிகள், பயணிகள் போன்றவர்களாக நாங்கள் சந்திக்கிறோம். இந்த காயங்கள் ஆக்கி ரோஷம் மற்றும் வன்முறையில் விளை கின்றன.


கேள்வி: நீதி என்பது ஒரு முக்கிய குறிச் சொல்லாகி விட்டது. இவ்வளவு நடந்து கொண்டிருக்கும் நிலையில், எதிர் வரும் காலத்தில் நம்மை நாமே ஆற்றுப் படுத்திக் கொள்ள முடியுமா?

பதில்: நீதி இல்லாத நாட்டில் பயங்கர வாதம் முளைவிடுகிறது . மே 9 அன்று நடந்தது இதுதான். காலி முகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது கும்பல் தாக்கு தல் நடத்தியபோது, நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்முறை வெடித்தது. வரலாறு முழுவதும் இதுதான் நடந் தது.

30 வருட இன மோதலுக்கு யாரும் தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்க வில்லை. யுத்தம் முடிந்து 13 வருடங் களாகியும் தங்கள் உறவுகளை காணா மல் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கிறிஸ் தவ மற்றும் கத்தோலிக்க சமூகங்களை காயப்படுத்திய ஒரு பயங்கரமான பேரழி வாகும். இழந்த உயிர்களுக்கு தாங்கள் பொறுப்புக் கூற வேண்டும் நீதி இல்லா மல், நாம் முன்னேற முடியாது.

இதைத் திரும்பத் திரும்பச் சொல்லியும் நாம் இந்தப் பாடத்தைக் கற்கவில்லை. நாங்கள் காயமடைந்துள்ளோம் என் பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், நாம் ஒன்றாகக் குணமடைய வேண்டும்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**




றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

11 யூன் 2022 சனிக்கிழமை


சனிப் பிரதோஷ விரதம்

13 யூன் 2022 திங்கட்கிழமை

பௌர்ணமி விரதம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்





# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

1.0% முதல் 1.5% வரை

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்



அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# பட்டினி அபாயம் மேலோங்கிய நாடுகளின் பட்டியலில் இலங்கை!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டினி மேலோங்கல் அபாய அறிக்கையிலேயே' மேற்கண்டவாறு இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இவ்வருடம் மேமமாதம் வெளியிடப்பட்ட 'பட்டினி மேலோங்கல் அபாய அறிக்கையின்' பிரகாரம் எதியோப்பியா, நைஜீரியா, தென்சூ டான் மற்றும் யேமன் ஆகிய 4 நாடுகளும் பட்டினி அபாயம் மேலோங்கிய நாடுகளாகத் திகழ்வதுடன் குறிப்பிடத்தக்களவு அபாயம் மிகுந்த நாடுகளின் பட்டியலில் ஆப்கானிஸ்தான் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகள் இணைந்திருக்கின்றன.

எதியோப்பியா, யேமன், தென்சூ டான், சோமாலியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சுமார் 750,000 பேர் வரையில் பட்டினிக்கும் உயிரிழப்புக்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்படக்கூடும்.

அதேவேளை கடந்த ஜனவரி மாதம் வெளியான அறிக்கையில் மிகமோசமடைந்துவரும் நிலைவரங்களின் காரணமாக உயர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளின் பட்டியலில் கொங்கோ, ஹெய்ட்டி,



சாஹெல் பிராந்தியம், சூடான், சிரியா ஆகிய நாடுகள் உள்ளடங்கியிருந்ததுடன், தற்போதை அறிக்கையின் பிரகாரம் அப்பட்டியலில் கென்யாவும் இணைந்து கொண்டிருக்கின்றது.

அது மாத்திரமன்றி பட்டினி அபாயம் மேலோங்கிய நாடுகளின் பட்டியலில் அங்கோலா, லெபனான், மடகஸ்கார், மொஸாம்பியா ஆகிய நாடுகளுடன் தற்போது இலங்கை, மேற்கு ஆபிரிக்கா, உக்ரேன் மற்றும் சிம்பாபே ஆகிய நாடுகளும் இணைந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து பசில் விலகல்! அமெரிக்கா பறந்தார் மனைவி



நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார். நேற்று 09 யூன் 2022 இடம் பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கடந்த 2021 ஜீலை 8ஆம் திகதி பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் நிதியமைச்சராகவும் பதவியேற்றிருந்தார்.

இதேவேளை அரசியல் மற்றும் அரச நிர்வாகம் ஆகிய இரண்டிலும் இதுவரையில் பங்கெடுத்து வந்த தான், இனி எந்தவொரு அரச நிர்வாக பதிவிகளையும் வகிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். தன்னை தேசிய பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தமைக்காக ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக அவர் நிதி யமைச்சர் பதவியிலிருந்து அண்மையில் விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பசில் ராஜபக்சவின் மனைவி புஷ்பா ராஜபக்ச நேற்று வியாழக்கிழமை அதிகாலை அமெரிக்கா பயணமாகியுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவர் அதிகாலை 3.15 மணியளவில் எமிரேட்ஸ் விமான நிறுவனத்தின் ஈ.கே. 649 என்ற விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து டுபாய் சென்றுள்ளதாகவும், அங்கிருந்து அமெரிக்கா செல்லவுள்ளதாகவும் குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 21ஐ ஏற்க முடியாது! எம்மவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியமைக்கு பொதுமக்களும் பொறுப்பு! - பசில்

தனிப்பட்ட ரீதியில் 21 ஆம் திருத்தத்தை நான் முழுமையாக எதிர்க்கின்றேன். 21 குறித்து அரசாங்கம் எடுக்கும் தீர்மானத்துடன் இணங்க முடியாது என்பதை முன்னரே உணர்ந்ததாலேயே பதவி துறந்தேன். என்னை இலக்காகக் கொண்டே 21 கொண்டு வரப்பட்டுள்ளது. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். எனினும் இது தொடர்பில் கட்சி ரீதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை. நாளை என்றாலும் கூட எந்தவொரு தேர்தலுக்கும் பொதுஜன பெரமுன தயார். எம்மவர்களுக்கு அதிகாரத்தை வழங்கி நாடு இந்நிலைமையை அடைந்தமைக்கு மக்களும் ஒருவிதத்தில் பொறுப்பு கூற வேண்டும். எனவும் பசில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்குள் பிரவேசித்த போது தான் எதிர்பார்த்த இரண்டு விடயங்களும் நிறைவேறியதாக தெரிவித்துள்ளார். பதவி விலகல் கடிதத்தை கையளித்ததன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் என்னால் முடிந்த வரை நான் செய்ய வேண்டியதை செய்தேன் என்று நினைக்கிறேன். ஆனால் மக்கள் எதிர்பார்த்ததை எல்லாம் செய்ய முடியவில்லை. இலங்கைக்கு வந்த போது நான் இரண்டு விடங்களை எதிர்பார்த்து வந்தேன். அந்த நேரத்தில் என் மீது இரண்டு பெரிய குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருந்தன (22ம் பக்கம் பார்க்க)

# தியாகங்களின் வெகுமதி

1974 ஜீன் 5இல் பொன். சிவகுமாரன் தான் வரித்துக் கொண்ட இலட்சியத்துக்காக உயிரை மாய்த்தார். அவர் உயிரிழந்து 48 வருடங்கள் ஆகின்றன. பொன். சிவகுமாரனை தொடர்ந்து, தாங்கள் வரித்துக் கொண்ட கொள்கைகளுக்காக, தங்களின் உயிர்களை கொடுப்பதற்கென ஓர் இளைஞர் கூட்டமே உருவாகியது. அதில் பலர் தாங்கள் செல்லும் பாதையின் சிக்கல்களை அறியாமலேயே இணைந்தவர்கள். அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் கண்டு விடலாமென்று நம்பியவர்களும் உண்டு.

இவ்வாறானவர்களில் பலர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் விடுதலை இயக்கங்களிலிருந்து வெளியேறி விட்டனர். விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையுடன் மோதும் முடிவையெடுத்த போது, விலகிச் சென்றவர்கள் இருக்கின்றனர். அவ்வாறு வெளியேறிவர்கள் பலர் இப்போதும் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் தாயக அரசியலென்பது அசை போடுவதற்கான ஒரு விடயம் மட்டுமே! மத்தியதர வர்க்கத்தினர் வெறுமனே ஆதரவாளர்களாக சுருங்கிக் கொண்டபோது, ஏழை இளைஞர்களே போராட்டத்தை சுமக்கும் நிலை உருவாகியது. போராட்டம் இடம்பெற்ற போது வெளியேறிய மத்தியதர வர்க்கம் தான்,

இன்றைய தமிழ் புலம்பெயர் சமூகம். தாயக அரசியல் சூழலைப் பொறுத்த வரையில் நினைவு கூர்தல் என்பது, ஒரு கட்சி அரசியல் செயல்பாடு மட்டுமே! தாம் இந்த இடத்துக்கு எவ்வாறு வந்தோம் ஏன் வந்தோம் இப்படியான கேள்விகளோடு அரசியலை முன்னெடுக்கும் தமிழ் தலைமுறையொன்றை இப்போது காண முடியவில்லை. இப்போதெல்லாம், அடுத்த தேர்தலில் எந்தக் கட்சியுடன் நின்றால் இலகுவாக மாகாண சபையில் ஓர் இடத்தை பிடிக்கலாம் எம். பி. ஆகலாம் என்னும் அடிப்படையில் தான் விடயங்கள் நோக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய அரசியலென்பது வெறுமனே தேர்தல் அரசியலாக சுருங்கி விட்டது. உரிமைக்கான அரசியல் பயணத்தில், தேர்தல் அரசியலுக்கும் ஒரு பங்குண்டு. நாம் அதனை மறுக்கவில்லை. ஏனெனில், அதிகாரத்தை கோரும் மக்கள் கூட்டமொன்றின் பிரதிநிதித்துவம் தவறானவர்களின் கைகளுக்கு சென்றுவிடக் கூடாது. ஏனெனில், சர்வதேச அரசியலில் ஒழுங்கில், தேர்தல்கள் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகளுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அந்த வகையில் தேர்தல் அரசியல் முக்கியமானது தான் ஆனால், அது மட்டும் தான் அரசியலென்று, வெறுமனே பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பது தான் தவறானது.

இன்று, தமிழ்த் தேசிய அரசியலிலிருக்கும் எவருமே விமர்சனத்துக்கு அப்பால்பட்டவர்கள் அல்லர். விமர்சனங்களுக்கு அப்பால்பட்டு எவரும் இருக்கவும் முடியாது. ஓர் இலக்குக்காக செயல்படுகின்றபோது தவறுகள் நிச்சயம் இடம்பெறும். தமிழ்த் தேசிய அரசியலில் எவரும் புனிதர்களல்லர். புனிதர்களுக்கு அரசியலில் இடமுமில்லை.

அரசியலை, ஒடுக்குபவர்களின் அரசியல் ஒடுக்கப் பட்ட மக்களின் அரசியல் என்றெல்லாம் நாம் வகைப்படுத்திக் கொண்டாலும்கூட, அரசியலுக்குரிய அடிப்படைகள் மாறவிடப் போவதில்லை. ஏனெனில், அனைத்து அரசியல் செயல்பாடுகளும் மனிதர்களால் தான் முன்னெடுக்கப்படுகின்றன.

மனிதர்களால் முன்னெடுக்கப்படும் அனைத்திலும் மனிதர்களின் பலவீனம் நிச்சயம் தாக்கம் செலுத்தும். இந்த அடிப்படையில்தான் தமிழ்த் தேசிய அர சியலை நாம் உற்று நோக்க வேண்டும். ஒரு காலத்தில் — ஓர் இலட்சியத்தை முன்வைத்து அதற்கான தங்களை ஆகுதியாக்கிக் கொண்டவர்கள் பல்லாயிரம்.

இப்போது நம்மை ஆக்கிரமித்திருக்கும் கேள்வி அவற்றின் வெகுமதியென்ன? நாம் இன்று வந்து சேர்ந்திருக்கும் இடம் எது? பெருமைப் பட்டுக் கொள்ளக் கூடிய இடமா? இந்த நிலைமைக்கு சாதாரணமாக அவர், இவர் அந்த நாடு, இந்த நாடென்று கூறி விட்டு (22ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# தோல்வி கண்ட ஜனாதிபதியாக நான் பதவி விலக மாட்டேன்! எஞ்சிய 2 ஆண்டுகள் ஆட்சி செய்த பின்பே பதவி விலகுவேன்!

தனது எஞ்சிய இரண்டு வருட பதவி காலத்தையும் நிறைவு செய்த பிறகே விலகப் போவதாக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ப்ளூம்பெர்க் செய்தி சேவைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தனது பதவி காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவி விலக போவதில்லை எனவும், ஐந்து வருடங்களுக்கு மக்கள் ஆணை அளித்துள்ளதால் எஞ்சியுள்ள இரண்டு வருடங்களையும் நிறைவு செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பதவி விலகுமாறு மக்கள் வீதிகளில் இறங்கி போராடுகின்ற நிலையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எனினும், தான் இனி தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தோல்வியடைந்த ஜனாதிபதியாக என்னால் செல்ல முடியாது. எனக்கு ஐந்து வருடங்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. நான் மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளை சந்தித்துள்ள இந்த தருணத்தில், எரிபொருள், எரிவாயு, மருந்து வகைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால், கோட்டா கோ கம என்ற மாதிரி கிராமம் அமைக்கப்பட்டு, ஜனாதிபதி செயலகம் முற்றுகையிடப்பட்டு இன்று 50 நாட்களை கடந்து அரச எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி செயலகம் மாத்திரமன்றி, நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இன்றும் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



இலங்கையின் பணவீக்கம் சுமார் 40 வீதத்தை எட்டியுள்ளது. இவ்வாறு இடம் பெற்ற போராட்டம், கடந்த மே மாதம் 9ம் தேதி வன்முறையாக மாறியதுடன், அந்த வன்முறைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட சுமார் 10 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 200ற்கும் அதிகமானோர் காயமடைந்ததுடன், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டு, சேதமாக்கப்பட்டிருந்தன. இந்த வன்முறைகளை அடுத்து, பிரதமராக பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ, தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, மே மாதம் 12ம் தேதி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, புதிய பிரதமராக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றார். இதையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர், சர்வதேச நாணய நிதியம், இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிடமிருந்து 4 பில்லியன் அமெரிக்க டாலர்களை கடனுதவியாக கோரியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அதிக காலம் உள்ள நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ பதவிக் காலம் முடிவடையும் வரை அரசியல் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர் ஒருவரை மேற்கோள்காட்டி ப்ளூம்பெர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் குறைந்தது 6 மாதங்கள் அல்லது ஒரு வருடத்திற்கு முன்பாக சென்றிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என ஜனாதிபதி கூறியுள்ளார். தான் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் உதவியை நாடியுள்ளதாகவும், தனிப்பட்ட ரீதியில் அந்த நாட்டு தலைவர்களுடன் கலந்துரையாடி, கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். மசகு எண்ணெயை நீண்ட கால உடன்படிக்கையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள கத்தார், ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்களுடன் தான் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், மானிய அடிப்படையில் முன்னோக்கி செல்ல வேண்டும். அரச ஊழியர்களை அல்லது ராணுவத்தை குறைக்க முடியாது. ஆள்சேர்ப்பை குறைக்க முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு அச்சுறுத்தலா?

(18ம் பக்கத் தொடர்ச்சி) எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

இலங்கையின் ஊடாக வரக்கூடிய இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான காரணிகளை தடுக்கவும், இந்தியாவுக்கு பாதுகாப்புக்கு கவசமாகவும் தமிழர்களால் இருக்க முடியும். ஆனால் அதனை தற்போதைய சூழலில் அவர்களால் செய்ய முடியாது. அதற்கு தமிழர்கள் குறைந்தபட்ச உரிமைகளுடனாவது வடக்கு, கிழக்கை ஆளுகின்ற நிலை இருக்க வேண்டும். அதனை இந்தியாவிடம் வலியுறுத்துவதற்குப் பதிலாக இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று பூ ச்சாண்டி காட்டுவதும், அச்சுறுத்தலை ஏற்படுத்த இடமளியோம் என்பதும் வெறும் வாய் வார்த்தைகள் தான்..

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தோல்வியடைந்த ஜனாதிபதியாக வீடு செல்ல விரும்பாத கோட்டபாய விருப்பம் சாத்தியமா?

நாடு இன்று இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதற்கு பெருமளவு பொறுப்பேற்க வேண்டியவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தான். தனி மனிதராக அவர் இழைத்த தவறுகள் தான் இந்த நிலைமைக்கு முழுக் காரணம். அதனால் அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். அல்லது விலக்கப்பட வேண்டும்' என வலியுறுத்தியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

தோல்வியடைந்த ஜனாதிபதியாக தான் பதவி விலகப் போவதில்லை என கோட்டாபய ராஜபக்ச அறிவித்திருக்கும் பின்னணியிலேயே இவ்வாறு சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

'கோட்டா கோ ஹோம்' என்ற கோசத்துடன் ஜனாதிபதி செயலகத்தை சுற்றி வளைத்து இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இரண்டாவது மாதத்தை நிறைவு செய்யவிருக்கும் நிலையில், கோட்டாபய ராஜபக்ச இந்த அறிவிப்பு வெளியாகியது. 'தோல்வியடைந்த ஒரு ஜனாதிபதியாக நான் பதவி விலகப் போவதில்லை. மக்கள் எனக்கு ஐந்து வருடங்கள் ஆட்சி செய்வதற்கான ஆணையைத் தந்திருக்கின்றார்கள். அதனைப் பூர்த்தி செய்த பின்னரே நான் விலகிச் செல்வேன்' என்பது தான் அவரது அறிவிப்பு.

கோட்டா கோ கம'வில் இரண்டு மாத காலமாகப் போராடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு அவர் கொடுத்திருக்கும் ஒரு தெளிவான செய்தி இது.

புளும்பேர்க் ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே ஜனாதிபதி இந்த அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றார். ஊடகங்களுக்கு ஜனாதிபதி நேர்காணல்களை வழங்குவது மிகவும் அரிது. அதிலும் கடந்த இரண்டு மாதங்களில் ஊடகங்கள் எதனையும் அவர் சந்தித்ததும் இல்லை. அந்த வகையில் இந்த நேர்காணல் மிகவும் அரிதான ஒன்றாகவே கருதப்படுகின்றது. மற்றொரு முக்கிமான தகவலையும் இந்த நேர்காணலின் போது அவர் தெரிவித்திருந்தார். இன்னொரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என்பது தான் அது.

நாடு தற்போது செல்லும் நிலையில் மற்றொரு தேர்தலில் அவர் போட்டியிட்டாலும் வெற்றிபெற முடியுமா என்பதும் கேள்விக்குறி தான். 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற அவரால் 2024 நவம்பர் வரையில் பதவியிலிருக்க முடியும். அதாவது இன்னும் சுமார் இரண்டு வருடங்களும் நான்கு மாதங்களும் சட்டப்படி அவர் அதிகாரத்திலிருக்க முடியும்.

இளைஞர்களின் போராட்டம் தீவிரமடைந்த ஒரு பின்னணியில் சக்தி வாய்ந்த ஒரு தலைவராகக் கருதப்பட்ட மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அண்ணனின் பதவியைப் பலிகொடுத்து தனது பதவியை கோட்டாபய தப்ப வைத்துக் கொண்டார். ஆனாலும், அவரைப் பதவி விலகக்கோரும் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கோட்டாபய 2024 நவம்பர் வரையில் பதவியிலிருப்பதை கோட்டா கோ கம இளைஞர்கள் பொறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்பதும் தெரிகின்றது.

தோல்வியடைந்த ஜனாதிபதியாக வீடு செல்லப்போவதில்லை என்றால், வெற்றி பெற்ற ஜனாதிபதியாவதற்கு அடுத்த இரண்டு வருடங்களுக்குள் என்னத்தை அவரால் சாதித்து விட முடியும்? முடிவடைந்த இரண்டரை வருடங்களுக்குள் நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளிய கோட்டாபய, மிகுதி இரண்டரை வருடங்களில் அதனை மீட்பதற்காக எதனையும் செய்யப்போவதில்லை என்பதும் உறுதி.



தற்போதுள்ள பொதுவான மக்கள் கருத்தின்படி தோல்வியடைந்த ஜனாதிபதியாகவே அவர் இருக்கின்றார். தன்னுடைய செயலகத்துக்கு கூட செல்ல முடியாத நிலையில், கடும் பாதுகாப்புடன் கூடிய ஜனாதிபதி மாளிக்கைக்குள் அவர் முடக்கப்பட்டிருக்கின்றார். 69 லட்சம் மக்களின் ஆணை தனக்கிருப்பதாக அவர் சொல்லிக் கொண்டாலும் கூட, அந்த ஆணையைப் பெறுவதற்காக அவர் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை. அதற்கும் மேலாக பொருளாதார நெருக்கடியை தாங்க முடியாது என்ற நிலையில் தான் மக்கள் வீதிகளில் இறங்கியிருக்கின்றார்கள்.

கோதா கே கமவில் நடைபெறும் போராட்டத்தின் பின்னணியில் ஜே.வி.பி.யும், முன்னிலை சோசலிச கட்சியும் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், தினசரி அங்காங்கே எரிவாயுவுக்காகவும், எரிபொருட்களுக்காகவும் நடைபெறும் போராட்டங்களின் பின்னணியில் எந்தக் கட்சியும் இல்லை. அவை முற்றுமுழுதாக மக்களின் ஆத்திரத்தின் வெளிப்பாடு. அதனை விட காலிமுகத்திடல் போராட்டத்தில் இருப்பவர்களும் நாட்டு மக்களின் உணர்வுகளைத் தான் பிரதிபலிக்கின்றார்கள். இந்த நிலையில், 69 இலட்சம் மக்களின் ஆணை தனக்கிருப்பதாக ஜனாதிபதி சொல்லிக் கொள்வது அர்த்தமுள்ள ஒன்றாக இருக்கமுடியாது.

மீண்டும் போட்டியிடும் யோசனை இல்லை எனச் சொல்லிக் கொள்வதன் மூலமாக - மக்களின் உணர்வுகளை அவர் புரிந்து கொண்டிருக்கின்றார் என்பது தெரிகின்றது. ஆனால், இரண்டு வருடங்களின் நிலைமைகளை மாற்றி வெற்றிபெற்ற ஜனாதிபதியாக அவர் வீடு செல்வதற்கான வாய்ப்புக்களும் இல்லை. ஏனெனில் தற்போது உருவாகியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினை 2024 இலிலும் தொடரும் என்றே பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றார்கள். ஆக - தனது பதவிக்காலம் முடியும் வரை அவர் அதிகாரத்திலிருந்தாலும் தோல்வியடைந்த ஜனாதிபதியாகவே அவர் வீடு செல்ல வேண்டியிருக்கும்.

ஜனாதிபதியால் இரவோடிரவாக அதிரடியாகக் கொண்டு வந்த இரசாயண உரம், கிரிமிசாசினி, களைகொல்லி போன்றவற்றுக்கான தடைதான் இன்று உருவாகியுள்ள உணவுத் தட்டுப்பாட்டுக்கும், அவற்றின் விலையேற்றத்துக்கும் பிரதான காரணம். இதனைவிட ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் சில பெரும் முதலாளிகளைத் திருப்திப்படுத்துவதற்காக செய்த வரிக்குறைப்பு அரசின் கஜானா காலியாவதற்கு காரணமாகியது. இதனை விட பொருளாதார நெருக்கடி தலைகாட்டிய போதே சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை அவர் நிராகரித்தார். முன்னரே நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றிருந்தால் நிலைமை இந்தளவுக்கு மோசமாகியிருக்காது.

ஆக, தற்போதைய நெருக்கடிக்கு பிரதான காரணமாக இருப்பவர் கோதாபய தான். நாட்டை படுபாதாளத்துக்குள் தள்ளிய அவர், தோல்வியடைந்த ஜனாதிபதியாக செல்லப்போவதில்லை என்பது நகைப்புக்குடமானது.

ஜனாதிபதியின் கருத்துக்களிலிருந்து மற்றொரு விடயமும் தெளிவாகத் தெரிகின்றது. தான் தோல்வியடைந்த ஒரு ஜனாதிபதியல்ல என்பதை நிரூபிப்பதற்கான முயற்சிகளை அடுத்த இரண்டு வருடங்களில் முன்னெடுக்கப் போகின்றார். தன்னுடைய இமேஜை பாதுகாப்பது தான் அவருக்கு முக்கியமாக இருக்கப்போகிறதே தவிர, நாட்டை மீட்பது அல்ல.

வெற்றி பெற்ற ஒரு ஜனாதிபதியாக அவர் 2024 இல் தன்னை மாற்றிக் கொண்டால், மீண்டும் போட்டியிடுவது குறித்துதான் அவர் சிந்திப்பார் என்பதும் கவனிக்கத்தக்கது.

அதேவேளையில், 'கோட்டா கோ ஹோம்' எனப் போராடி வருபவர்கள் வெறுமனே ஆட்சி மாற்றம் ஒன்றை மட்டும் கோரவில்லை. ஆட்சி முறைமை மாற்றத்தையும் கேட்கின்றார்கள். குறிப்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய பிரதான கோரிக்கை. இதற்காகத்தான் 21 ஆவது திருத்தம் கொண்டுவரப்படுகின்றது. ஆனால், 21 நிறைவேற்றப்படுமா என்பதும் இன்று கேள்விக்குறியாகியிருக்கின்றது.

இதில் ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை விட்டுக் கொடுக்கும் நிலையில் பொதுஜன பெரமுன இல்லை. நிறைவேற்று அதிகாரம் தான் தற்போதைய நிலையில் தமக்குள்ள பலமாக பொதுஜன பெரமுன கருதுகின்றது. பாராளுமன்றப் பெரும்பான்மை பொதுஜன பெரமுனயிடம் இருப்பதால், அதன் நிலைப்பாட்டை மீறி 21ஐ நிறைவேற்றுவது சாத்தியமல்ல.

21 ஆவது திருத்தத்தில் இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான விடயத்தை பொதுஜன பெரமுன எதிர்க்கவில்லை. அதன்மூலம் பசில் ராஜபக்ச பதவி விலக வேண்டிவரும் என்பதைத் தெரிந்து கொண்டும் அதனை அவர்கள் ஏற்றார்கள். இதன்படி பசில் பதவி விலகுகின்றார். ராஜபக்சக்களுக்குள்ளேயே தனக்குத் தான் எதிர்ப்பு அதிகம் என்பது பசிலுக்குத் தெரிந்துள்ளது. தொடர்ந்தும் இங்கிருந்து அரசியல் செய்ய முடியாது என்ற நிலையில்தான் பதவியைத் துறக்க அவர் முன்வந்தார். 21 வரமுதலே பதவி துறப்பது கொஞ்சமாவது அனுதாபத்தைக் கொண்டு வரும் என அவர் கருதியிருக்கலாம்.

இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தில் விட்டுக்கொடுத்து ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை அகற்றுவதை அனுமதிப்பதில்லை என்பதில் மொட்டு உறுதியாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் தனது நேர்காணலிலும் பெயரளவுக்கான ஒரு ஜனாதிபதியாக தான் இருக்க விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தார். அதாவது நிறைவேற்று அதிகாரங்களுடன் எஞ்சிய காலத்துக்கும் இருப்பது தான் அவரது நோக்கம். மக்களுடைய எதிர்பார்ப்பு என்ன? நாட்டுக்கு எவ்வாறான அரசியலமைப்பு அவசியம்? என்ற கேள்விகளைவிட தேல்வியடைந்த ஜனாதிபதியாக தான் வீடு செல்லக் கூடாது என்பதில்தான் அதிக அக்கறையானவராக அவர் இருக்கின்றார்.

மக்களின் எதிர்ப்பை எதிர் கொள்வதற்கு அல்லது சமாளிப்பதற்கு சகோதரர்கள் இருவரது (மகிந்த, பசில்) அரசியலையும் பலி கொடுத்து தன்னைப் பாதுகாப்பது தான் கோட்டாபய உபாயமாக உள்ளது. அத்துடன் 21 என்று சொல்லி காலத்தைக் கடத்துவதற்கும் அவர் முற்படுகின்றார். கோட்டா கோ கம வில் போராடும் இளைஞர்கள் இதனை அனுமதிப்பார்களா?

## பாராளுமன்றத்தைக் கலையுங்கள் அது ஆணையை இழந்து விட்டது

பாராளுமன்றம் தனது ஆணையை இழந்துள்ளது. இதனால் அது கலைக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் தற்போது அரசாங்கத்திலும், வெளியிலும் தங்களை சுயாதீன எம். பிக்கள் என்று கூறும் பல குழுக்கள் உள்ளன. எனவே, பாராளுமன்றத்தில் அரசாங்க தரப்பு, எதிர் தரப்பு என்று அழைக்கப்பட முடியாது. இந்தப் பாராளுமன்றம், சுயாதீனமாக இயங்கும் எம். பிக்களையே கொண்டுள்ளது. இது ஒரு புதிய 'வழக்கம்' இலங்கை பாராளுமன்றம் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கொண்டது. சுயாதீனமாக இயங்கும் எம். பிக்களை அல்ல. இங்கே அமர்ந்திருக்கும் அனைவரும் சுயாதீனமாக இயங்கும் எம். பிக்கள் என்று கூறினால் இந்தப் பாராளுமன்றம் தோல்வியடைந்து விட்டது. அது எங்கள் அமைப்புமுறை அல்ல. பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர் இன்னும் ஜனாதிபதியாகவே இருக்கிறார். நெருக்கடியை சமாளிக்க பொறுப்பான நபர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# வர்த்தகரை அச்சுறுத்திக் கப்பம்:- அமைச்சர் பிரசன்னாவுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்

மேல் மாகாண முதலமைச்சராக இருந்த போது காணி ஒன்று தொடர்பில் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி உறுதி மொழிக் குறிப்பினை கையெழுத்திட்டுக் கொண்டமை தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை குற்றவாளியாக கண்ட கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு இரு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்ததுடன் அத் தண்டனையை 5 வருடங்களுக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டது.

அத்துடன் குறித்த குற்றம் தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு 25 மில்லியன் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம், பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு (முறைப்பாடளித்தவர்) ஒரு மில்லியன் ரூபா நட்ட ஈடு செலுத்தவும் உத்தரவிட்டது.



கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இதற்கான தீர்ப்பை அறிவித்தார். மேல் மாகாண முதலமைச்சராக பிரசன்ன ரணதுங்க இருந்த போது, மீத்தொட்டமுல்லை பகுதியில் சதுப்பு நிலப் பகுதியொன்றினை நிரப்புவதற்கு தேவையான அனுமதியை வழங்கவும், அந் நிலப்பகுதியில் இருந்து சட்ட விரோத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், கிஹான் மெண்டிஸ் எனும் வர்த்தகரிடம் 64 மில்லியன் ரூபாவை கோரி அச்சுறுத்தியமை, உறுதி மொழிக் குறிப்பொன்றினை கையெழுத்திட்டுக் கொண்டமை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதிக்கும் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குற்றம் இழைத்ததாக கூறி, சட்ட மா அதிபரால் அப்போதைய மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவரது மனைவி மொரீன் ரணதுங்க மற்றும் நரேஷ் குமார் பரீக் ஆகியோருக்கு எதிராக 15 குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந் நிலையில், மூன்றாவது பிரதிவாதியான நரேஷ் குமார் பரீக் என்பவர், வழக்கு விசாரணை ஆரம்பிக்க முன்னரேயே நாட்டை விட்டு தப்பிச் சென்றிருந்த நிலையில் அவர் இல்லாமலேயே குறித்த வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றம் விசாரணை செய்தது. சாட்சி விசாரணைகள் நிறைவுற்ற நிலையில் திங்கட்கிழமை (6) குறித்த வழக்கின் தீர்ப்பு நீதிபதி மஞ்சுள திலகரத்னவால் அறிவிக்கப்பட்டது.

இதன் போது தீர்ப்பை அறிவிக்க ஆரம்பித்த நீதிபதி முதலில் தொடரப்பட்டிருந்த அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் 2ஆம் பிரதிவாதியான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் மனைவி மொரின் ரணதுங்க, 3 ஆம் பிரதிவாதி நரேஷ் குமார் பாரிக் ஆகியோரை விடுவித்து விடுதலை செய்வதாக அறிவித்தார்.

எனினும் தொடரப்பட்டிருந்த 15 குற்றச்சாட்டுக்களில், 13ஆவது குற்றச்சாட்டான , அச்சுறுத்தி உறுதி மொழிக் குறிப்பொன்றினை கையெழுத்திடச் செய்து பெற்றுக் கொண்டமை தொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை குற்றவாளியாக நீதிமன்றம் காண்பதாக நீதிபதி அறிவித்தார். குற்றவாளியான பிரசன்ன ரணதுங்க, தனக்கு சட்ட ரீதியாக சொந்தமற்ற ஒரு சொத்தை சட்ட விரோதமாக பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளதாக தீர்ப்பை அறிவித்து திறந்த மன்றில் நீதிபதி மஞ்சுள திலகரத்ன தெரிவித்தார். இந் நிலையில் குற்றவாளியாக காணப்பட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்பில் தண்டனை வழங்கப்படும் போது, இலகு ரக தண்டனை ஒன்றினை வழங்குவது தொடர்பில் மன்றில் நியாயங்களை முன்வைக்க குற்றவாளி தரப்புக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இந் நிலையில், குற்றவாளி பிரசன்ன ரணதுங்க சார்பில் மன்றில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா, மன்றில் விடயங்களை முன்வைத்தார். இதனையடுத்து தண்டனை எவ்வாறு அமைய வேண்டும் என வழக்கை நெறிப்படுத்திய அரசின் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ் விடயங்களை முன்வைத்தார்.

இதனையடுத்து தண்டனை குறித்த தீர்ப்பை அறிவித்த நீதிபதி மஞ்சுள திலகரத்ன, குற்றவாளியான பிரசன்ன ரணதுங்கவிற்கு 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 02 வருட கால கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

25 மில்லியன் ரூபா அபராதத்தை விதித்த நீதிபதி, அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 09 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என தெரிவித்தார்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு ஒரு மில்லியன் ரூபா நஷ்ட ஈட்டை செலுத்துமாறும் அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்களுக்கு சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என நீதிபதி எச்சரித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



தமிழ், சமய, சமூகப் பணிகளில் நீண்ட காலமாக
சேவையாற்றிவருபவரும் பல வருட காலமாக ஆசிரியப் பணிக்கு
அழகு சேர்த்தவருமான

## கௌரவ. ஸ்ரீமதி. மீனா தவரட்ணம்

அவர்களின்

சேவைநலத்தைப் பாராட்டி உரும்பிராய் பழையமாணவர்களின் அனுசரணையுடன்,
அவரது பழைய மாணவரும் தொழில் அதிபருமான திரு.சாந்தா பஞ்சலிங்கம் நடாத்தும்

# பாராட்டுப் பெருவிழா



JC'S BANQUET HALL
1686 ELLESMERE ROAD,
TORONTO, ONTARIO,
CANADA

**Saturday**
**July 2nd, 2022**
**6:30 PM**

உலகமெங்கும் வாழும் ஸ்ரீமதி தவரட்ணம் அவர்களின் மாணவர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உரிமையுடனும் அன்புடனும் வேண்டுகிறோம்.

**Kindly RSVP by June 20th, 2022**

உங்கள் அன்பான தொடர்புகளுக்கு.
சாந்தா பஞ்சலிங்கம் 416.200.5470 | info@santha.ca
Mohan 416.567.0144 | thavmohmt@gmail.com

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

04 யூன் 2022 முதல் 10 யூன் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**
**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை சங்கரப்பிள்ளை

புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய பொறியியலாளர் திரு கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 19 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் கனகசபை சங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம்

கொழம்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம் அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 யூன் 2022 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி லில்லி திரேஸ் மயில்வாகனம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2022 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திரு இராஜேந்திரன் கந்தசாமி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 12 யூன் 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லம், பாரதி இ.ல்லம், செஞ்சோலை இல்லம் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜேந்திரன் கந்தசாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வேலும்மயிலும் தங்கவடிவேல்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு வேலும்மயிலும் தங்கவடிவேல் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு வேலும்மயிலும் தங்க வடிவேல் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த் திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 11 யூன் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சுகிர்தாதேவி தங்கவடிவேல் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த் திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 யூன் 2022 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் கிறிஷ் செல்வி ஆர்த்தி ஆகியோரின் திருமண நன்நாள் ஆகும். அன்றைய தினம் இணையர்கள் தங்களது திருமண நன்நாளுக்காக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



03 யூன் 2022 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் கிறிஷ் செல்வி ஆர்த்தி ஆகியோரின் திருமண நன்நாள் ஆகும். அன்றைய தினம் இணையர்கள் தங்களது திருமண நன்நாளுக்காக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



06 யூன் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி குகதாசன் கலா தம்பதிகளின் செல்வப்புதல்வி தர்ஷி குகதாசனின் பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி தர்ஷி குகதாசன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



09 யூன் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 யூன் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் புதுமனை புகுவிழா நிகழ்வை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




08 யூன் 202 கனடாவில் வசிக்கும் செல்வி அருண் ஜலாவின் 9வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி அருண் ஜலா அவர்கள் 10 யூன் 2022 வெள்ளிக்கிழமை தனது பெற்றோர், உற்றாருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



# LOGAN KANAPATHI

MPP, MARKHAM – THORNHILL

***அனைவருக்கும் அன்பான நன்றிகள் .***

என் அன்பார்ந்த தமிழ் உறவுகளே!
ஜூன் மாதம் 2ம் திகதி நடந்த மார்க்கம் தொர்ன்ஹில் ***(Markham-Thornhill)*** மாகாண சபைத் தேர்தலில் மீண்டும் என்னை தேர்வு செய்து ஆதரவு தந்த அனைவருக்கும் அன்பான நன்றிகள்.

தொடர்ந்தும் உங்கள் குரலாக ஒண்டாரியோ பாராள மன்றத்தில் ஒலிப்பேன்.

ONTARIO PC

Authorized by the CFO for the Logan Kanapathi Campaign

உ
சிவமயம்



# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

## Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# 1008 வலம்புரி சங்காபிஷேகம்



3ம் ஆண்டு ஸம்வத்ஷராபிசேகம் அஷ்டோத்திரசகஸ்ர

வலம்புரி (1008) சங்காபிஷேகம்

10.06.2022 வெள்ளிக்கிழமை





முருகன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான சுபகிருதுவருஷம் வைகாசிமாதம் 27ம் திகதி (10.06.2022) வெள்ளிக்கிழமை சுக்லபஷ்ஷ ஏகாதசி திதி சித்திரை நட்சத்திரமும் சித்தயோக சுபதினத்தில் ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின் ஸம்வத்ஷராபிசேகமும் அஷ்டோத்திரசகஸ்ர சங்க (1008) ஸ்நபனாபிஷேகமும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது

அபிஷேகத்தில் வைக்கப்பட்டு முருகப்பெருமானின் திருவருள் பெற்ற வலம்புரி சங்குகள் சங்காபிஷேகத்தில் பங்களிப்பு நல்கி கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு அவர்களது வீட்டுப்பூஜை அறைகளில் வைத்து வழிபடுவதற்காக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஆலய காரியாலயத்தினுடன்
தொடர்பு கொள்ளவும்

அடியார்கள் அனைவரையும் அந்நிகழ்வில் பங்களித்து
முருகப்பெருமானின் அருளாசியினை பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

சுபம்

இங்ஙனம்
அறங்காவலர் சபை

ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின்
மிகப்பிரமாண்டமான வெளியரங்க நிகழ்வு

# இசை பிரியங்கம்

Powered by

DYNEVOR EXPRESS

எமது கலைஞர்களின் சங்கமம்

ஆடல் பாடல் கொண்டாட்டம்

அனுமதி இலவசம்

PLATINUM SPONSOR

VENTHINY & VENNILA
KATHIRGAMANATHAN
CENTURY 21 HERITAGE GROUP LTD.

DR.SATHY
ALBION FINCH DENTAL CENTER
1620 ALBION RD, ETOBICOKE, ON

DR .M .SATHIYAPALAN
CHERRYCREST DENTAL CENTRE
25 CHERRYCREST DRIVE UNIT 5, BRAMPTON, ON

ALLEN'S
MR.VIJEYARATNAM PONNAIH
143 DANFORTH AVENUE TORONTO, ON

JUNE 11,12th 2022

தொடர்புகளுக்கு: 416 744 9568 | 647 465 3720

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases






Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance®
Life | Health | Auto | Home | Travel | Wealth





# TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- ❑ **Personal Tax**
- ❑ **Corporate Tax**
- ❑ **Book Keeping & Accounting**
- ❑ **Payroll Services**
- ❑ **GST/HST Filing**
- ❑ **Corporate Services**
- ❑ **Business Startup**
- ❑ **Financial Planning**



## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# பட்டினியை நோக்கி....



வரும் ஒக்டோபர் மாதத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பெரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள நேரிடும் என்று அறிவியல்பூர்வமாக எதிர்வு கூறுவதையிட்டு அழுவதா? அல்லது நமது எதிர்வு கூறல் வெற்றி பெறும் தன்மையோடு காணப்படுகிறது எனக் கருதி மகிழ்வதா? என்று தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே.

ஒக்டோபர் மாதமளவில் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று அவர் எச்சரித்துள்ளார். சிறுபோகம் இப்பொழுது பாதியளவு முடிந்து விட்டது. போதுமான அளவு ரசாயன உரம் இதுவரையிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இம் முறை மூன்று லட்சத்து 15 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் சிறுபோகம் செய்யப்படுகிறது. வழமையாக 4 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தான் சிறுபோகம் செய்யப்படுவதுண்டு.

சிறு போகத்துக்கு 80 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா அவசியம். ஆனால் நாட்டில் இரசாயன உரத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு, அதிக விலைக்கு உரம் விற்கப்படுகிறது. இதனால் இந்த முறை சிறுபோக விளைச்சல் 50 சதவிகிதத்தால் குறையும். உணவுத் தட்டுப்பாடு என்ற சவாலை வெற்றி கொள்ள அரசாங்கம் நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்களை விரிவாக செயல்படுத்தா விட்டால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஒரு லட்சத்து 90 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியை மாதாந்தம் இறக்குமதி செய்ய நேரிடும் என்ற தொனிப்படவும் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சிறு போகத்துக்கு தேவையான போதியளவு உரம் கிடைக்காது என்றும் உரத்தைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகள் நிலவுவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்

இப்போதுள்ள நிலையில் பணம் கொடுத்தாலும் உரத்தை விற்க எந்த ஒரு நாடும் தயாராக இல்லை. ஏனெனில் உலகளாவிய உணவுப் பஞ்சம் தொடர்பாக எதிர்வு கூறப்படுகிறது. இதனால் எந்த நாடும் உரத்தை விற்பதற்கு தயாராக இல்லை. இந்தியாவில் இருந்து நாம் உரத்தைப் பெறுகிறோம். எனவே இப்போது சிறு போக பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரத்தை வழங்க முடியும் என்ற உறுதிமொழியை வழங்க முடியாது. ஆயினும் பெரும்போக பயிர்ச் செய்கைக்காவது தட்டுப்பாடின்றி உரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை நாம் இப்போதிருந்தே முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

செப்டம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புண்டு என்று தேசிய விவசாய ஒருங்கிணைப்பின் தலைவர் அனுராத தென்னகோன் கடந்த வாரம் தெரிவித்துள்ளார். மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிபதிகளைச் சந்தித்தபின் அவர் ஊடகவியலாளர்களுக்கு மேற்கண்டவாறு கூறியுள்ளார். கோத்தபாயவின் தவறான விவசாயக் கொள்கையால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இரசாயன உரமும் இல்லை, சேதன உரமும் இல்லை. உரத்தட்டுப்பாட்டுடன் இப்பொழுது எரிபொருள் பிரச்சினையும் சேர்ந்துள்ளது. எரிபொருள், உரம் இரண்டும் இல்லாததால் விவசாயம் செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தவறான உரக் கொள்கையால் பெரும்போக விவசாயத்தில் விளைச்சல் 60 சதவிகிதத்தால் குறைந்து விட்டது. எதிர்வரும் காலத்தில் பெரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது. நடுத்தரவர்க்க மக்களால் கொள்வனவு செய்யமுடியாத அளவுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்கிறது. ஓகஸ்ட் செப்டம்பர் மாதப் பகுதிகளில் உணவு நெருக்கடி வரலாம். என்றும் அவர் தெரிவித்துள்ளார் சிறுபோக விவசாய நடவடிக்கைகள் சில மாவட்டங்களில் தாமதமாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 2 வாரங்களுக்குள் பயிற்செய்கையில் ஈடுபடத் தவறினால்,நாட்டில் உணவுத் தட்டுப்பாடு உக்கிரமடையும் என நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் கலாநிதி. அபேசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியுள்ள அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண முடியாது என முன்னாள் விவசாயத்துறை பணிப்பாளர் கே.பி குணவர்தன தெரிவித்துள்ளார். ”கடந்த 2021 ஆம் ஆண்டு மக்களின் நுகர்வுக்கு அவசியமான அரிசி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் கடந்த பெரும் போகத்தின் போது, இரசாயன உர இறக்குமதி இடை நிறுத்தப்பட்டதால், நெல் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளில் கிடைக்கும் அறுவடை 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்டவாறு விவசாயத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் கருத்து தெரிவிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னரே நாட்டின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஓர் உணவு நெருக்கடி தொடர்பாக எச்சரித்திருந்தார். அவரும் அடுத்த ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதம் இரவில் உணவு நெருக்கடி ஏற்பட வாய்ப்புண்டு என்று எச்சரித்திருந்தார்.

நிலவும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக சில மாதங்களுக்கு முன் நிகழ்ந்த ஒரு சூம் சந்திப்பின் போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமிர்தலிங்கம் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டியிருந்தார். இலங்கைத்தீவு இதுவரை சந்தித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதார அதிர்ச்சிகளின் போது நாட்டை பாதுகாத்தது விவசாயம் தான் என்று அவர் அதில் கூறினார். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி ஏற்றதும் உரக் கொள்கையில் கை வைத்தார். இரசாயன உரங்களுக்கு பதிலாக இயற்கை உரத்தை பயன்படுத்த வேண்டும் என்று அவர் கட்டளையிட்டார். அவருக்கு முன் ஆட்சி செய்த எல்லாத் தலைவர்களுமே விவசாய வாக்காளர்களை கவர்வதற்காக இரசாயன உரத்துக்கு மானியம் வழங்கினார்கள். அவருடைய தமையனார் மஹிந்தவும் அவ்வாறு மானியம் வழங்கினார். இதனால் விவசாயத் திணைக்களம் விவசாயிகளுக்கு உரப்பை ஒன்றை 350 ரூபாயிலிருந்து 450 வரை ரூபாய் வரையிலும் மானிய விலையில் வழங்கியது. ஆனால் கோத்தாபய ஜனாதிபதியாக வந்ததும் நாட்டை இராணுவத்தனமாக இயற்கை உரத்துக்கு மாற்றவிழைந்தார். அது பெருந்தொற்று நோய்க் காலம். ஏற்கனவே இனப்பிரச்சினை காரணமாக நொந்து போயிருந்த பொருளாதாரம், ஏற்கனவே ஈஸ்டர் குண்டு வெடிப்பினால் நொந்து போயிருந்த பொருளாதாரம், ஏற்கனவே கோத்தபாயவின் வரிக் குறைப்பினால் நொந்து போயிருந்த பொருளாதாரம், அரசாங்கத்தின் புதிய உரக் கொள்கையால் நெருக்கடிக்கு உள்ளாக்கியது. பேராசிரியர் அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டியது போல இதற்கு முன் வந்த எல்லாப் பொருளாதார அதிரச்சிகளில் இருந்தும் நாட்டை பாதுகாத்த



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

விவசாயம், இந்த முறை நாட்டைப் பாதுகாக்க முடியாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த போகங்களில் செயற்கை உரப் பாவனை குறைந்தபடியால் விளைச்சல் 20 வீதம் அளவே கிடைத்தது என்று விவசாயிகள் பொதுவாகக் கூறுகிறார்கள். ஒரு பகுதி விவசாயிகள் 12 விகிதம்தான் கிடைத்தது என்று முறைப்பாடு செய்கிறார்கள்.

இயற்கை உரம் ஓர் உன்னதமான கொள்கை. பூமியைப் பாதுகாக்க விரும்பும் எவரும் அதை ஏற்றுக் கொள்வர். ஆனால் தன் நாட்டின் குடிமக்களில் ஒரு பகுதியினரை ஈவிரக்கமின்றி புழு பூச்சிகளைப் போல கொன்றொழித்து யுத்தத்தை வெற்றி கொண்ட ஒருவர், நாட்டின் மண்ணை நேசிக்கிறேன் மண் வளத்தைப் பாதுகாப்பதற்காக இரசாயன உரத்தை நிறுத்துகிறேன் என்று கூறியது ஓர் அகமுரணே.

பொருளாதார நெருக்கடியானது மக்களால் தாங்க முடியாத ஒரு வளர்ச்சியை அடைந்த பொழுது, முன்னைய காலங்களைப் போல அந்த அதிர்ச்சியை தாங்கக் கூடிய நிலையில் விவசாயம் இருக்கவில்லை. இவை அனைத்தினதும் திரட்டப்பட்ட விளைவே மக்களை வீதிக்குக் கொண்டு வந்தது.

விவசாயிகளின் எதிர்ப்புக் காரணமாக அரசாங்கம் (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
“இணுவில் திருவூர்”
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO ★ SWAMI SARANAM ★

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஐயப்பன் மெய்யடியார்களே!

### கணபதி ஹோமம் (கும்பாபிஷேக தினத்திற்காக)

### காலை 11.06.2022 சனிக்கிழமை

11.06.2022 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கணபதி ஹோமமும்
மாலை 6.00 மணி முதல் பூர்வாங்க பூஜைகள் ஆரம்பம்

### கும்பாபிஷேக தினம் (3ம் ஆண்டு)

### மணவாளக் கோலம்

### காலம் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே! கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் நிகழும் சுபகிருது வருடம் வைகாசித் திங்கள் 30ம்நாள் (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை விசாக நட்சத்திர புண்ணிய தினத்தில் மூன்றாம் ஆண்டு கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு ஸ்ரீஐயப்பப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் ஏனைய பரிவாரங்களுக்கு 10 கும்ப அபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து 11.00 மணிக்கு விசேட பூஜைகளுடன் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் பங்கு பெற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

### வைகாசி விசாகப் பெருவிழா

### காலம் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை

முருகப்பெருமானுக்கு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலை மாலை விசேட 10 கும்ப அபிஷேகமும்

இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்



ஐயப்பன் திறந்த வெளியில் ஐயப்பன் ஆலயம் வழங்கும்

JULY 30TH

JULY 31ST

அனுமதி இலவசம்
FREE ADMISSION

# JOYTHI 2022

## இவ்வாண்டின் மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி

## GRAND MUSICAL EVENT

மேலதிக விபரங்களுக்கு: 416-321-6104, 416-321-7558

அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8

# ரணிலின் அரசியல் சதுரங்கம்?



கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யதீந்திரா-



சில வாரங்கள் வரையில், ரணிலின் அரசியல் வாழ்வு கிட்டத்தட்ட முடிந்து விட்டதான ஒரு அனுமானமே பரவலாக இருந்தது. ஆனால், ராஜபக்சக்களின் வீழ்ச்சி, ரணில் விக்கிரமசிங்கவை ஆறாவது பிரதமராக்கியிருக்கின்றது. இதன் மூலம், ரணில் தனது அரசியல் எதிர்காலம் தொடர்பான அனைத்து ஆருடங்களையும் ஒரு ஆசனத்தின் மூலம் தோற்கடித்திருக்கின்றார். ரணிலின் பதவியேற்பு தொடர்பில், பலவாறான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அவரது நியமனம் ஜனநாயக ரீதியானதல்ல அது முறையானதல்ல என்று கூறுவோர் உண்டு.

ரணில் விக்கிரமசிங்கவின் நியமனத்தை, ஜனநாயகரீதியில் பார்க்க முடியுமென்று நான் கருதவில்லை. இது அடிப்படையில் நெருக்கடி நிலையை கையாளுவதற்கான ஒரு தந்திரோபாய நகர்வு. தந்திரோபாய நகர்வுகளுக்கும் ஜனநாயகத்திற்கும் என்ன தொடர்பு? இதில் வெளித்தெரியாத டீல்கள் இருக்கலாம். அதிகார அரசியலில் டீல்கள் தவிர்க்க முடியாதவை அதையும் விட்டு விடுவோம். இவ்வாறான எதிர் கருத்துக்களுக்கப்பால், இன்றைய சூழலில் ரணில் விக்கிரமசிங்க நிலைமைகளை சமாளிக்கக் கூடிய ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர்கள் மத்தியிலும் அவ்வாறான அப்பிராயம் பரவலாக உண்டு.

ரணில் ஒரு நரியென்னும் அப்பிராயம் தமிழ் தேசியவாதிகள் மத்தியிலுண்டு. நான் தமிழ் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த போது, படித்த தமிழர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நரியென்று கூறுவதை பரவலாக கேட்டிருக்கின்றேன். அதாவது, அவர் ஒரு தந்திரசாலி. அவரிடம் கவனமாக இருக்க வேண்டுமென்னும் அச்சத்திலிருந்தே, மேற்படி பார்வை உருவாகியது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடர்பிலும் தமிழ் அரசியலாளர்கள் மத்தியில் இவ்வாறான பார்வையே உண்டு. ஜெயவர்த்தன வழிவந்த ஒருவர் என்பதால் தான், ரணிலையும் பலர் அவ்வாறு உச்சரிக்கின்றனர். இங்கு நரியென்னும் அடைமொழி, அரசியல் அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. ஒரு தலைவன் என்பவன், நரியாகவும் இருக்க வேண்டுமென்பது, மாக்கியவல்லியின் அறிவுரை. மாக்கியவல்லியின் பார்வையில், ஒரு தலைவர் என்பவர் சிங்கமாகவும் நரியாகவும் இருக்க வேண்டும். ரணில் மாக்கியவல்லியின் கூற்றுக்கு இணையான ஒரு அரசியல்வாதி. ரணிலின் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவே, பிரபாகரன், தேர்தல் பகிஸ்கரிப்பின் மூலம், அவரை தோற்கடிக்கும் வியூகத்தை வகுத்திருந்தார்.

2005 தேர்தலில், தமிழ் மக்கள் பெருவாரியாக வாக்களித்திருந்தால், நிச்சயம், ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருப்பார். ரணிலின் புத்திசாதுர்யம்மிக்க வியூகங்களை எதிர் கொள்வதை விடவும், கடும் போக்குவாதியொருவரின் யுத்தத்தை எதிர் கொள்வதையே, பிரபாகரன் விரும்பினார். இறுதியில் அவரது தெரிவு அவருக்கே அழிவானது. தங்களின் வெல்ல முடியாத அரசியல் எதிரிகளை, தற்கொலை தாக்குதலின் மூலம் வீழ்த்துவதே, புலிகளின் வழமையான அரசியல் தந்திரோபாயமாகும். ரணில் விக்கிரமசிங்கவின் விடயத்தில், வழமைக்கு மாறாக, தமிழர்களின் வாக்குகளை கொண்டே, ரணிலின் அரசியல் எதிர்காலத்தை பிரபாகரன் தோற்கடித்தார்.

இப்போது அவர் பிரதமராக வந்திருக்கும் பின்னணி தொடர்பான, விமர்சனங்களுக்கு அப்பால், இன்றைய சூழலை கையாளுவதற்கு ரணிலை விடவும் வேறொரு பொருத்தமான நபர் இல்லையென்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். 2019 நாடாளுமன்ற தேர்தலில், படுமோசமான தோல்வியை சந்தித்திருந்த ரணில் விக்கிரமசிங்க, ஒரேயொரு ஆசனத்தின் மூலம் நாட்டின் பிரதமராக வந்திருக்கின்றார் என்றால், அது அவரது புத்திக் கூர்மையன்றி, வேறொன்றுமில்லை. ராஜபக்சக்கள் மிகவும் திட்டமிட்டு இதனை செய்திருக்கின்றனர் என்றும் சிலர் கூறுகின்றனர் இதனை நான் சரியான கணிப்பாக பார்க்கவில்லை. ஏனெனில் ஜனாதிபதி கோட்டாபாயவின் முதல் தெரிவு, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவாகவே இருந்தது. ஆனால் சந்தர்பத்தை சரியாக கையாளுவதில் துரிதமாகவும் புத்திசாலித்தனமாகவும் பிரேமதாச செயற்பட்டிருக்கவில்லை. இந்த இடைவெளியைத் தான் ரணில் பயன்படுத்திக் கொண்டார்.

இன்றைய சூழலில் மக்களின் முதன்மையான பிரச்சினை பொருளாதார சுமைதான். இதனை சரிசெய்வதில் ரணில் வெற்றி பெறுவாராக இருந்தால், அவர் மீளவும் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள ஒரு தலைவராக வந்துவிடலாம். ஆனால் ஆட்சி மாற்றத்தின் போது, ரணிலின் மீது வைத்திருந்த நம்பிக்கையை பாதுகாப்பதில் அவர் தோல்வியடைந்திருந்தார். ரணில்-மைத்திரி ஆட்சியின் தவறுகளும் ராஜபக்சக்களின் மீளெழுச்சிக்கு ஒரு பிரதான காரணமாகும். ஆட்சி மாற்றத்தின் தோல்வியே, இறுதியில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் சிதைவுக்கும் வழிவகுத்தது. எந்த ராஜபக்சக்களை வீழ்த்துவதற்காக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதோ, இறுதியில், ராஜபக்சக்களை பலப்படுத்துவதற்கே அது பயன்பட்டது. அந்த வகையில், ஆட்சி மாற்றத்தை தக்கவைப்பதில் ரணிலால் வெற்றி பெற முடியவில்லை.

ரணில் இன்றைய நெருக்கடி நிலைமையை கையாளக் கூடியவரென்று கூறுவதற்கு பின்னாலிருக்கும் பிரதான காரணம், அவர் மேற்குலகிற்கு சார்பானவர் என்னும் பார்வையாகும். இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில், அமெரிக்கா அதிக ஈடுபாடு காட்டியிருந்தது. இதற்கு, அமெரிக்காவின் அப்போதைய உதவி ராஜாங்கச் செயலர், ரிட்சர்ட் ஆமிட்ரேஜின் பிரத்தியோக ஈடுபாடும் ஒரு பிரதான காரணமாகும். இது பற்றி, அப்போது, இலங்கைக்கான, அமெரிக்க தூதுவராகவிருந்த ஜிப்ரி லுன்ஸ்டட் இவ்வாறு விபரிக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டுமென்பதில் ரிச்சர்ட் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாடு காண்பித்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி, அடிப்படையில் மேற்கு சார்பான கட்சி. உலகளாவிய கொன்சர்வேட்டிவ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பில், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு அங்கத்துவ கட்சி. இந்த கூட்டமைப்பின் இணை நிறுவனர்களில், அப்போது அமெரிக்காவின் ஜனாபதியாக இருந்த ஜோர்ஜ். எச்.டபிள்யு. புஸ்சும் ஒருவராவார். அதே வேளை, அமெரிக்காவின் குடியரசு கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான நீண்டகால நெருக்கமிருந்தது. இப்படியான காரணங்களால், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த வேண்டுமென்பதில் ஆமிட்ரேஜ் பிரத்தியேக ஈடுபாடு காண்பித்திருந்தார். அன்றைய சூழலில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள வட்டாரத்தில், இலங்கைக்கான அதிகாரியென்று அழைக்கப்படுமளவிற்கு, ஆமிட்ரேஜ், இலங்கை விடயங்களில் பிரத்தியே ஈடுபாட்டை காண்பித்திருந்தார். ஆனால் ஆமிட்ரேஜின் பிரத்தியேக நகர்வையே விடுதலைப் புலிகள் தோற்கடித்திருந்தனர். மேற்குலகு விடுதலைப் புலிகளுக்கு எதிராக முற்றாக திரும்பிய இடமும் இதுதான்.

ரணில் விக்கிரமசிங்க மிகவும் புத்திக் கூர்மையுள்ளவராக இருந்த போதிலும் கூட அவரால் நிறைவேற்றதிகார கதிரையை ஒரு முறை கூட தொட முடியவில்லை. 2005இல் விடுதலைப் புலிகளால் அந்த வாய்ப்பை இழந்து போனார். 2015இல், ஆட்சி மாற்றத்திற்கான பரந்த கூட்டணியொன்று உருவாக்கப்பட்ட போதிலும் கூட, ரணிலுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேனவிற்கு பின்னாலிருந்தே ரணில் செயற்பட வேண்டியேற்பட்டது. ஆட்சிமாற்றம், ரணில் விக்கிரமசிங்கவை மீளவும் அதிகாரமுள்ள பிரதமராக முன்னிறுத்திய போதிலும் கூட, ரணில்-மைத்திரி உள் மோதல்களால், அவர், மீளவும் மக்கள் மத்தியில் அன்னியப்படக் கூடிய சூழலே உருவாகியது. சஜித் பிரேமதாசவின் பிளவால், இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சி முற்றிலுமாக சிதைந்தது. கிட்டத்தட்ட ரணில் விக்கிரமசிங்க காணாமல் போய் விட்டார் என்னும் நிலையிலிருந்து தான், அவர் தற்போது, மீளவும் பிரதமராகியிருக்கின்றார்.

எரிக் சொல்கெய்ம், சொல்வது போன்று, ரணில் விக்கிரமசிங்க ஒரு சிறந்த புத்திஜீவி ஆனால் தெருச் சண்டைக்காரரல்ல அவரிடம் விரிவான பொருளாதார திட்டமிருந்தது சிங்கப்பூர், தாய்வான் போன்று, இலங்கையையும் மாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால், சிங்கள தெருச்சண்டித்தனத்திற்கு முன்னால் ரணிலின் புத்திக் கூர்மை வெற்றி பெறவில்லை.

ரணிலால் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக ஒரு போதுமே நிமிரமுடியவில்லை. ஆனாலும் தனது புத்திக் கூர்மை கொண்டு, தனக்கான ஆடுகளத்தை அவர் எப்போதுமே உருவாக்கிக் கொள்கின்றார். தெருச்சண்டியர்களான ராஜபக்சக்கள் தேற்றுப் போயிருக்கும் ஆடுகளத்தில், சிங்கமாகவும் நரியாகவும் மீண்டும் ரணில், களமிறங்கியிருக்கின்றார். ரணில் இதற்கு முன்னர் ஆடிய அரசியல் களங்களுக்கும் இதற்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. மீட்பர்கள் இல்லாத இடைவெளியில், தன்னால் மீட்க முடியுமென்னும் நம்பிக்கையோடு களமிறங்கியிருக்கின்றார். இது மிகவும் சிக்கலான சவால். இந்தச் சவாலில் ரணில் வெற்றி பெற்றால், அவர், மக்கள் மத்தியில் மறக்க முடியாதவொரு தலைவராவார் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஒரு விடயம் உண்மை. ரணில் இந்த ஆட்டத்தில் தோல்வியடையக் கூடாது. ஒரு வேளை ரணில் தோல்வியடைந்தால், நாடு மீள முடியாத நெருக்கடிக்குள் வீழ்வது நிச்சயம். மோசமான வன்முறையொன்றும் வெளிக் கிளம்பலாம்.

வரலாறு பல ஆச்சரியங்களை மறைத்து வைத்திருக்கும் ஆசானாகும். 2005இல், ரணிலின் தோல்விக்கு தமிழர்கள் காரணமானபோது அது விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் பேரழிவை கொடுத்தது. இப்போது சிங்களவர்கள் ரணிலை தோற்கடித்தால், சிங்களவர்கள் பேரழிவை சந்திக்க நேரிடும். இப்போது ரணில் தமிழர்களுக்கு தேவையோ இல்லையோ ஆனால் நிச்சயம் சிங்களவர்களுக்கு தேவை. எனது கருத்தில் அவர் தமிழர்களுக்கும் தேவை தான்.

**அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் வருடாந்த திருவிழா 2022**

**ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடு!**

ஆலய வருடாந்த திருவிழா இவ்வாண்டு ஜீன் மாதம் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி பூங்காவனத்துடன் நிறைவுபெற திருவருள் பாலித்துள்ளது. நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு கனடா வாழ் கும்பழாவளை பிள்ளையார் பக்தர்களால் கும்பழாவளை பிள்ளாயார் திருப்பணி சபையினருடன் இணைந்து வருடாவருடம் இலக்கம் 3025 **Kennedy** வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட அபிடேகபூசை வழிபாடு நடைபெறுவது 2002ஆம் ஆண்டிலிருந்து நடைபெறும் வழமையான திருநிகழ்வாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நோய் பெரும்பரவல்காரணமாக நடைபெறாத போதும் இவ்வாண்டு ஜுன் மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியிலிருந்து வழமை போல விசேட அபிடேக பூசை வழிபாடு நடைபெற திருவருள் பாலித்துள்ளது. புலம் பெயர்ந்தாலும் புலன் பெயராமலிருக்கும் கும்பழாவளை பிள்ளையார் பக்தர்கள் அனைவரும் இத்திருநிகழ்வில் கலந்து சிறப்பித்து எல்லாம் வல்ல கும்பழாவளை பிள்ளாயார் பேரருளை வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பெற்றேகுமாறு பக்தியுடன் அழைக்கின்றனர் கும்பழாவளை பிள்ளையார் திருப்பணி சபையினர்.

தொடர்புகளுக்கு
சி.கந்தசாமி (தலைவர்,திருப்பணி சபை) 647 294 7488.
நன்றி! வணக்கம்!

# இந்தியாவுக்கு அச்சுறுத்தலா?

அண்மையில் வவுனியாவில் நடத்திய ஊடகச் சந்திப்பு ஒன்றில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்த கருத்துக்கள், இந்தக் கேள்வியை எழுப்ப வைத்திருக்கிறது.

ஏனென்றால் கச்சதீவை விட்டுத் தர மாட்டோம் என்றும், இந்தியாவிற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் அதனை பயன்படுத்த தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டார்கள். அதனால் இந்திய தனது பாதுகாப்பு விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கள், கச்ச தீவு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படக் கூடுமா என்ற கேள்வியை மாத்திரமன்றி, அவ்வாறான பாதுகாப்பு அச்சுறுத்தலை தடுக்கும் வல்லமை, தமிழ் மக்களுக்கு இருக்கிறதா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவே உள்ள, கச்சதீவைச் சுற்றி நடைபெறும், சர்ச்சைகள் அந்த விவகாரத்தை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலானதொரு பாலமாக விளங்கும் கச்சதீவு, இரண்டு நாட்டு மீனவர்களும், இளைப்பாறப் பயன்படுத்தி வந்த இடம். இரண்டு நாடுகளையும் சேர்ந்த பக்தர்கள், திருவிழாவுக்காக ஒன்று கூடிவந்த இடம்.

இவற்றைத் தாண்டி, மக்கள் வசிக்காத கச்சதீவுக்கு என வேறெந்த முக்கியத்துவமும் கிடையாது. குறிப்பாக கச்ச தீவை பாதுகாப்பு கேந்திரமாக ஒரு போதும் குறிப்பிட முடியாது.

இந்தியாவுக்கு மிக நெருக்கமாக உள்ள தீவாக கச்சதீவு அமைந்திருந்தாலும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற ஒரு இடமாக கருதப்படவில்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கச்ச தீவில் இலங்கை கடற்படை ஒரு சிறிய ராடர் தளத்தை நிறுவியது. குறிப்பிட்ட சில வசதிகளுடன் அந்த தளம் இயங்குகிறது.

கச்சதீவின் மீதான உரிமையை நிலை நாட்டுவதற்காக உருவாக்கப்பட்டதே அந்த கடற்படைத் தளம். அண்மையில் வடக்கிற்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீன தூதுவர் கீ சென் ஹோங், கச்சதீவுக்கு இரகசியமாகப் பயணம் செய்தார் என்ற புரளியும் கிளப்பப்பட்டது. அதனை சீனத் தூதரகம் மறுத்திருந்தது.

பாக்கு நீரிணையில் உள்ள அனலை தீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றில் கலப்பு மின் திட்டங்களை நிறுவும் ஒப்பந்தம் சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது தொடர்பான சர்ச்சைகள் நடந்து கொண்டிருந்த போதே, சீனத் தூதுவரின் பயணம் குறித்தும் புரளிகள் கிளம்பின.

பாக்கு நீரிணையில் உள்ள தீவுகளில் சீன நிறுவனம் கலப்பு மின் திட்டத்தை முன்னெடுக்கப் போகிறது என்ற தகவல் வெளியானதும், இந்தியா அதனை தடுத்து நிறுத்தியது.

அந்த திட்டங்களை தானே கொடையாக செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. இந்தியா தனக்கு நெருக்கமான தீவுப்பகுதிகளில், தனக்கு விரோதமான சக்திகள் காலூன்றுவதை விரும்பவில்லை.

கடந்த வாரமும் கூட எரிபொருள் நெருக்கடியால் தொழிலின்றி கஷ்டப்படுகின்ற தீவுப் பகுதி மீனவர்களுக்காக, 15 ஆயிரம் லீட்டர் மண்ணெண்ணெயை இந்தியா கொடையாக வழங்கியது.

மீனவர்களுக்கு சீனா உதவிப் பொதிகளை வழங்கியதும், இந்தியா இப்போது உதவிகளை வழங்குவதும், ஒரு தந்திரோபாய நடவடிக்கை தான். அதற்காக, இந்தியாவோ சீனாவோ தீவுகளை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைகின்றன என்று



அர்த்தமில்லை.

எந்தவொரு நாடும் இலங்கையின் எல்லைக்குள் இருக்கின்ற தீவுகளை தங்களின் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளவும் முடியாது. தளம் அமைக்கவும் முடியாது. அதற்கான அவசியமும் தற்போது இல்லை.

இந்தியாவுக்கு விரோதமான சக்திகள், பாக்கு நீரிணையில் மட்டுமல்ல, வடக்கு, கிழக்கிலும் கூட இலகுவாக நிலைகொள்ள முடியாது.

அவ்வாறான நிலை ஏற்பட்டால், இந்தியா பதிலுக்கு இராஜதந்திர ரீதியாக முயற்சிக்கும். அது சரிப்பட்டு வராது போனால், பொருளாதார ரீதியாக முயற்சிக்கும். அதுவும் சரிவராது போனால் வேறு பல வழிகளை கையாளும்.

கச்சதீவைப் பொறுத்தவரையில் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எனக் கருதினால், இந்தியா அதனை ஒரு போதும் விட்டுக் கொடுக்க இணங்கியிருக்காது.

நெடுந்தீவை, நயினாதீவை, எவ்வாறு பார்க்கிறதோ, அது போன்று தான் இந்தியா கச்சதீவையும் பத்தோடு பதினொன்றாக பார்க்கிறது.

இது இந்தியாவின், இந்திய கொள்கை வகுப்பாளர்களின் நிலையில் இருந்து பார்க்கும் பார்வை. இது தமிழகத்தின் பார்வையல்ல.

கச்சதீவைப் பயன்படுத்தி வேறொரு நாடு, இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி விட முடியாது, அதற்கு இந்தியா அனுமதிக்கவும் மாட்டாது. அவ்வாறான நிலை ஏற்பட்டால், தனது கைக்கு எட்டிய தூரத்தில் இருந்து கொண்டே, காலில் போட்டு நசுக்கி விடும் இந்தியா.

ஏனென்றால், வெறும் 285 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட, வேறெந்த வளங்களும் இல்லாத– பாரிய விநியோக கப்பல்கள் செல்ல முடியாத கச்சதீவில், எந்த நாடும் தனது படைகளை நிலை நிறுத்தி இந்தியாவுடன் மோத முடியாது.

கருங்கடலில் உள்ள பாம்புத் தீவில் இருந்து உக்ரைன் படையினரை, ரஷ்யா எவ்வாறு அமுக்கியதோ அதுபோல இந்தியா செய்து விடும்.

இலங்கையினால் கூட, இந்தியாவுக்கு ஆபத்துள்ளது என்றில்லை. ஏனென்றால், கச்சதீவில் இலங்கை கடற்படை தளத்தை அமைத்த போது கூட, இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அதை விட இந்தியா தனது எதிரியாக நினைத்துக் கொண்ட விடுதலைப் புலிகள், பாக்கு நீரிணையின் ஊடாக விநியோகங்களை மேற்கொள்வதை அறிந்திருந்தும் கூட, இந்தியா, கச்ச தீவில் ஒரு தளத்தை அமைக்க நினைக்கவில்லை. எனவே, இந்தியா கச்சதீவை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கருதவில்லை. தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தாது எனக் கருதாத கச்ச தீவை இந்தியா மீளக் கைப்பற்றும் என்பது வீண் வாதம்.

இவ்வாறான நிலையில், இந்தியாவிற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கச்ச தீவைப் பயன்படுத்த தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். அதனால் இந்தியா தனது பாதுகாப்பு விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. என்று செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டிருப்பது வேடிக்கையான விடயம்.

இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய நிலையில் இங்குள்ள தமிழர்கள் இருக்கிறார்களா? தமிழர்களின் பாதுகாப்பே கேள்விக்குறியாகியுள்ளது. தமிழர்களின் நிலங்கள் பறிக்கப்படும் ஆபத்தில் உள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழர்களால் எப்படி இந்தியாவின் பாதுகாப்பை

**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**



உறுதிப்படுத்த முடியும்? தமிழர்கள் அதிகாரம் படைத்தவர்களாக இருந்தால் அதனைச் செய்ய முடியும்.

குறைந்த பட்சம், வடக்கு, கிழக்கை குறைந்தபட்ச அதிகாரங்களுடன் ஆளுகின்ற உரிமையைக் கொண்டிருந்தால் கூட, இந்தியாவுக்கு அவ்வாறான வாக்குறுதியை வழங்க முடியும்?

தமிழர்களின் பாதுகாப்புக்கு விரோதமான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதே, தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வெளிநாடுகளைத் தான் தேடி ஓடினார்கள்.

நெடுந்தீவில், நயினாதீவில், அனலை தீவில் சீனா காலடி வைக்கப் போகிறது என்றதும், இந்தியா தான் அதனை தடுத்து நிறுத்தியதே தவிர, தமிழர் பிரதிநிதிகள் அல்ல. அதனை எதிர்த்து அறிக்கைகளை வெளியிட்டதை தவிர அவர்களால் வேறெதையும் செய்ய முடியவில்லை.

வடக்கின் கடற்றொழிலுக்கு அச்சுறுத்தலாக சீனர்களின் கடலட்டைப் பண்ணைகள் வேகமாக முளைத்த போது, அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கொந்தளித்த தமிழ் அரசியல்வாதிகளால், அதனை தடுக்க(6ம் பக்கம் பார்க்க)



# புலம்பெயர்ந்த தமிழர்கள் எப்போது முதலீடு செய்ய வருவார்கள்?

கட்டுரையாளர்:
– பாரதி இராஜநாயகம் –
சிரேஷ்ட ஊடகவியலாளர்

எப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் முதலீடுகளை கொண்டுவர வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

புலம்பெயர்ந்த மக்கள் என பொதுவாகச் சொன்னாலும், இது புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு அழைப்புத் தான். ஜனாதிபதி கோட்டா



பய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவருமே இவ்வாறு அழைப்பு விடுக்கின்றார்களே தவிர அதற்கான விசேட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் அந்நியச் செலாவணி முற்றாகத் தீர்ந்து விட்டது தான். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பல்வேறு உபாயங்கள் சொல்லப்படுகின்றன. அதிலொன்றுதான் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும் என்பது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுதந்திர தினத்தன்று நிகழ்த்திய உரையில், ``புலம்பெயர்ந்த மக்கள் தமது சேமிப்புக்களை இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும்'' என அழைப்பு விடுத்திருந்தார். இதே போன்ற ஒரு கருத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தன்னுடைய உரை ஒன்றின் போது வெளிப்படுத்தியிருந்தார். ``நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினையை சமாளிப்பதற்கு புலம்பெயர்ந்தவர்கள் கொண்டுவரக் கூடிய டொலர் முக்கியமான ஒரு வளமாக இருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவித்த இந்தக் கருத்துக்கள் உண்மையானவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழர்கள் பெருமளவு செல்வத்துடன் உள்ளார்கள் என்பது உண்மை.

அவர்களுடைய முதலீடுகள் இலங்கைக்கு வருமாக இருந்தால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினைக்கு கணிசமான தீர்வைக் காணலாம் என்பதும் உண்மை. ஆனால், அந்த முதலீடுகள் தொடர்பில் தெளிவான கொள்கைத் திட்டம் ஒன்றை வெளியிடாமல், அது தொடர்பில் புலம்பெயர்ந்த மக்களுடன் பேசாமல் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவது பலனைத் தரப்போவதில்லை.

எரிபொருட்களையும், எரிவாயுவையும், அவசியமான மருந்துப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு இந்தியா உட்பட சில நாடுகள் கடன்களைக் கொடுத்திருந்தன. அதற்காகப் பெறப்பட்ட கடன்களும் இந்த மாதத்துடன் முடிவுக்கு வரப்போகின்றது. உலக வங்கியும், சர்வதேச நாயண நிதியமும் வழங்கக்கூடிய கடன்கள் கிடைப்பதற்கு இவ்வருட இறுதிவரையில் காத்திருக்க வேண்டும். அதற்கு இடைப்பட்ட காலத்துக்குள் தேவையான டொலருக்கு என்ன செய்வது என்பதற்கு இதுவரை யாரிடமும் பதிலில்லை.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனில் பெருமளவு நிதியை வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றன. உக்ரைன் போரின் விளைவுகளால் அந்த நாடுகளின் பொருளாதாரமும் தாக்கப்பட்டிருக்கின்றது. இதனால், இலங்கைக்கு நிதியை வழங்குவதற்கு அந்த நாடுகளின் கஜானாவிலும் டொலர் இல்லை.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கையின் திட்ட வரைபடத்தைக் கேட்கின்றன. இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையையும் அவை எதிர்பார்க்கின்றன. இந்த இரண்டும் இங்கில்லை. இந்த நிலையில் புலம்பெயர்ந்த மக்களை நோக்கி அரசாங்கம் திரும்புவது தவிர்க்க முடியாதது தான். புலம் பெயர்ந்த மக்களிடமிருந்து இரண்டு விதமான பண வரத்தை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஒன்று தமது குடும்பத்தினர் உறவினர்களுக்கு மாதாந்தம் அவர்கள் அனுப்பும் பணம் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அனுப்பப்பட வேண்டும். இதன் மூலமாகவே உடனடியாக அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான சில ஊக்குவிப்புக்களை அரசாங்கம் செயற்படுத்திய போதிலும், இன்றும் உண்டியல் மூலமாகவே பெருமளவு பணம் வருகிறது. அவ்வாறு அனுப்புவது தான் பாதுகாப்பானது என புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி, சிங்களவர்கள் கூட கருதும் நிலை உள்ளது. இவ்விடயத்தில் நம்பிக்கையை கட்டியெழுப்ப அரசாங்கம் தவறிவிட்டது.

இரண்டாவது முதலீடுகள். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் நேரடியான முதலீடுகள் தொடர்பிலான நம்பிக்கை பல்வேறு மட்டங்களிலும் துளிர் விட்டிருந்தது. ஆனால், அவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் இன்றுவரையில் காணமுடியவில்லை.

இதற்கு என்ன காரணம் என பொருளாதார நிபுணர் ஒருவரிடம் கேட்டபோது முக்கியமான பிரச்சினைகளை அவர் கூட்டிக் காட்டினார். ``முதலீடு செய்ய வருபவர்கள் பல விடயங்களில் கவனம் செலுத்துவார்கள். ஒன்று - எங்கு சென்று முதலீடு செய்தால் அதிகளவு இலாபம் வரும் என்பதைப் பார்ப்பார்கள்.

இரண்டாவது முதலீட்டுக்கான பாதுகாப்பை உத்தரவாதத்தை எதிர்பார்ப்பார்கள். மூன்றாவது தொழிலாளர்களின் வேலை ஒழுக்கம் என்பதை எதிர்பார்ப்பார்கள். இதனைவிட முதலீடு செய்வதற்கான நடைமுறைகள் வெளிப்படைத் தன்மையாக இருக்க வேண்டும் அதாவது கையூ ட்டுக்கள், கொமிசன்கள் இல்லாத நிலையை அவர்கள் எதிர்பார்ப்பார்கள். இது எதுவுமே இல்லாத நிலையில் இலங்கையில் முதலீடு செய்ய அவர்கள் எவ்வாறு முன்வருவார்கள்'' என அவர் கேள்வி எழுப்புகின்றார்.



இதனைவிட அரசியல் ஸ்திரத்தன்மையும், வெளிப்படைத்தன்மையும் உள்ள மற்றொரு நாட்டை அவர்கள் தேடிப் போவார்கள் என அவர் சுட்டிக்காட்டுகின்றார். அது தான் நடந்து கொண்டும் இருக்கின்றது.

ஆனால், புலம்பெயர்ந்த மக்கள் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரும் போது, இது எமது நாடு- இதனை கட்டியெழுப்புதில் எனக்கும் பங்குண்டு என்ற நம்பிக்கையுடன் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரலாம்'' எனக் குறிப்பிடுகின்றார் பொருளாதார ஆலோசகரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வின்.

குறைந்தளவு இலாபம் கிடைத்தாலும், முதலீடுகளுக்கு பாதுகாப்பு இருந்தால் போதும் என அவர்கள் கருதலாம். குறைந்தளவு இலாப நோக்கத்தையும், அதிகளவு சமூக நோக்கத்தையும் கொண்டதாக இந்த முதலீடுகள் இருக்கும் எனத் தெரிவிக்கும் செல்வின் மற்றொரு விடயத்தையும் முக்கியமாக சுட்டிக்காட்டுகின்றார்.

புலம்பெயர்ந்த தமிழர் தமது தாயகம் எனக் கருதும் வடக்கு கிழக்குப் பகுதியில் தான் முதலீடுகளைச் செய்வதற்கு விரும்புவார்கள். இதற்கான சிறப்பு பாதை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும். இதுவரையில் அரசாங்கம் அது குறித்து பேசவில்லை. வடக்கு கிழக்கை தனியான பொருளாதார வலையமாக உருவாக்கி அதற்கான சிறப்பு செயலணி ஒன்றை உருவாக்கினால், அந்த செயலணி துரிதமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படக் கூடிய ஒன்றாகவும் இருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இது குறித்து சிந்திப்பார்கள் என்பது அவரது கருத்து. ஆனால், அவ்வாறான நிலை இங்கில்லை. கடந்த காலங்களில் குறிப்பாக ``நல்லாட்சி'' காலத்தில் நம்பிக்கையுடன் பெருமளவு முதலீடுகளைச் செய்வதற்காக வந்த புலம் பெயர்ந்த தமிழ் தொழில்முனைவோர் பலர் ஏமாற்றத்துடன் தான் திரும்பிச் சென்றார்கள்.

அவர்களுடன் கொமிசன் எவ்வளவு தருவீர்கள் என்பது குறித்து தான் முக்கியமாகப் பேசப்பட்டது. அதனால் அவர்கள் விரக்தியுடன் திரும்பியது வரலாறு. அவ்வாறு திரும்பிச்சென்ற பலர் பின்னர் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் கூட பாரிய பண்ணைகளில் முதலீடுகளைச் செய்திருக்கின்றார்கள்.

ஆக புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கி அழைப்பு விடும்போது அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. இவை தொடர்பாக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்பினருக்குள்ளது.

இதனைச் செய்தால் நீண்டகால அடிப்படையில் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு பெருமளவு பங்களிப்பை புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

நன்றி:- வீரகேசரி



# பா.ஜ.க.வை கையாள்வதில் திணறுகிறாரா ஸ்டாலின்?

**கட்டுரையாளர்: தமிழகத்தில் இருந்து**

**- குடந்தையான் -**

ஆட்சியில் அமர்ந்து எட்டு ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் பிரதமர் நரேந்திர மோடி தனது ஆட்சிக்காலத்தில் இந்தியாவை முன்னேற்றுவதற்கு சரியான பாதையை தெரிவு செய்திருப்பதாகவும், இதில் பயணித்தால் உலகமே வியக்கும் வல்லரசு நாடாக இந்தியா திகழும் என்ற வாதம் வலுவடைந்து வருகிறது.

மக்கள் ஆதரவுடன் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்து ஓராண்டை நிறைவு செய்திருக்கும் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு அறிமுகப் படுத்தியிருக்கும் திராவிட முறைமை பாணியிலான அரசும், மீதமுள்ள நான்கு ஆண்டுகளுக்கான பாதையை தெளிவாக தெரிவு செய்து பயணிக்கிறது என்ற வாதமும் மேலோங்கியுள்ளது.

ஆனால் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் தி.மு.க. அ.தி.மு.க. என்ற இரு திராவிட கட்சிகள், ஆளும் கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் மாறி மாறி பணியாற்றி மக்கள் நலன்களுக்காக பாடுபட்டன. ஆனால் தற்போது ஆளுங்கட்சியான தி.மு.க., எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வை விட, வளர்ந்து வரும் எதிர்க்கட்சியான பா.ஜ.க.வை எதிர் கொள்வதில் தடுமாறி வருகிறது.

குறிப்பாக, பா.ஜ.க. முன்னெடுக்கும் இந்துத்துவா அரசியல் குறித்த விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை மேற் கொள்ளாமல் முரண்பட்ட முடிவுகளை மேற் கொண்டு, வருவதால் தி.மு.க. ஆட்சி மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்படக்கூடிய சூழல் உண்டாகும் ஆபத்தான நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்திற்கு வருகை தந்து அரச விழாவில் பங்கு பற்றிய போது அதில் பங்குப ற்றிய தமிழக முதல்வர் ஸ்டாலின் திராவிட முறைமை குறித்து பிரதமர் முன்னிலையில் பேசியதுடன், மக்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளையும் வலியுறுத்தினார்.



அவரது பேச்சு குறித்து தமிழக பா.ஜ.க. கடும் விமர்சனத்தை முன் வைத்தாலும், பிரதமரிடம் நேரடியாக கோரிக்கையை சமர்ப்பித்தது தவறல்ல என்பதே தமிழக மக்களின் எண்ணமாக இருக்கிறது. இவ் விடயத்தில் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமிழக மக்களின் நலன் குறித்து பேசும் முதல்வராக ஸ்டாலின் பாராட்டு பெறுகிறார்.

ஆனால் தமிழக முதல்வர் ஸ்டாலின் விடுத்த கோரிக்கை குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட வேண்டிய விவகாரம் என்றோ அல்லது இது குறித்து உரிய முறையில் பேச்சு வார்த்தை விரைவில் தொடங்கலாம் என்றோ அல்லது இது தொடர்பாக மத்திய அரசு ஆலோசிக்கும் என்ற அளவிலோ எதனையும் பிரதமர் மோடி தன்னுடைய பேச்சில் குறிப்பிடாதது, தமிழக மக்களை அவமதிப்பது போல் உள்ளது.

இவ்விடயத்தில் தமிழக முதல்வர், பிரதமர் மோடி தமிழக விஜயத்தின் போது மேடையில் வைத்த கோரிக்கைகள் குறித்து அவர் பதிலளிக்காததைக் கண்டித்து ஒரு அறிக்கை கூட வெளியிடாதது.. அவர் பா.ஜ.க.வை சரியாக கையாளத் தெரியாத அனுபவ மற்ற அரசியல்வாதியாக தோற்றமளிப்பதாகவுள்ளது.

கடந்த சில நாட்களாக தி.மு.க.வின் தலைமை மீது அதிருப்தியில் இருக்கும் மூத்த தலைவர்களையும், அவர்களின் வாரிசுகளையும் சந்தித்து, அவர்களிடம் பல்வேறு பதவி பேர வாக்குறுதி அரசியலை நடத்தி, அவர்களை பா.ஜ.க.வில் சேர்த்து வருகிறது தமிழக பா.ஜ.க.

இதனால் தி.மு.க.விலிருந்து யாரேனும் சென்று விடக் கூடும் என்பதற்காக, அக்கட்சியின் தலைவரான ஸ்டாலின், திருச்சி செல்வேந்திரன், ரி. ராஜேந்தர் உள்ளிட்ட தி.மு.க.வின் மூத்த, முன்னாள் மற்றும் இந்நாள் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இதன் மூலம் பா.ஜ.க.விற்கு தி.மு.க.விலிருந்து திறமையான தலைவர்கள் இட மாற்றம் செய்யப்படுவது தடுக்கப் பட்டிருக்கிறது.

உதயநிதி ஸ்டாலினை அமைச்சராக்க வேண்டும் என்று வலியுறுத்தி சில மாவட்ட தி.மு.க.வினர் தீர்மானம் நிறைவேற்றி தலைமைக்கு அனுப்பி இருக்கும் விவகாரம் குறித்து, பா.ஜ.க. விரைவில் குடும்ப அரசியல், வாரிசு அரசியல் ஆகியவை பற்றி வீரியமாக பேசத் தொடங்கும் என்பதை அறிந்த உதயநிதியின் ஆதரவாளர்கள் உதயநிதியிடம் இது தொடர்பாக தங்களது எண்ணங்களை தெரிவித்தனர். உடனடியாக அவர் அறிக்கை ஒன்றின் மூலம், மாவட்ட அளவிலான தி.மு.க.வினர் தன்னை அமைச்சராக்க வேண்டுமென தீர்மானத்தை இயற்றி, தலைமைக்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது கண்துடைப்பு அறிக்கையென அதி.மு.க.வினர் விமர்சிக்கின்றனர்.

இது தொடர்பாக தி.மு.க.வின் முன்னணி நிர்வாகிகள், விரைவில் கலைஞரின் நூற்றாண்டு கொண்டா ட்டம் தொடங்கப்படவிருக்கிறது. அதன் இறுதியில் கட்சியின் தொண்டர்களுக்கு பரிசாக உதயநிதி அமைச்சராக கூடும் எனத் தெரிவிக்கிறார்கள்.

தமிழகத்தில் பெரியார் விதைத்த பகுத்தறிவு சிந்தனை, அரசியல் விழிப்புணர்வு, தமிழர் இன மற்றும் அடையாள அரசியல் நிலைப்பாடு, சமூக நீதி, பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் உள்ளிட்ட பல விடயங்களில் மக்களுக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதால், அவை தொடர்ந்து நீடிக்குமெனத் துல்லியமாக அவதானிக்கப்படுகிறது.

இதனால், தமிழகத்தில் பா.ஜ.க., சலசலப்பையும், பதற்றத்தையும் ஏற்படுத்தலாமே தவிர, அக்க ட்சியால் ஒரு போதும் அதிகாரத்திற்கு வர இயலாது என்று கள அரசியல் புலனாய்வு நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். இதனை துல்லியமாக உணர்ந்து, பா.ஜ.க. மீது எம்மாதிரியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமோ, அதனை சூழலுக்கு ஏற்ற வகையில் உறுதியாக ஆளும் கட்சியான தி.மு.க. மேற்கொள்ள வேண்டும். இதனை தவிர்த்து தி.மு.க. தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டால், பாஜகவின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்து விடும். இத்தகைய மாற்றம் நடைபெற்றால் அதனால் பாதிக்கப்படுவது தி.மு.க. மட்டுமல்ல, திராவிட முறைமை அரசியலும் என்பதை உணர வேண்டும்.


AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை

ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்



- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...

a1actour.com@gmail.com

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே 3 to 4 Star Hotel or Motel

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

தங்குமிட வசதி காலை உணவு பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour


416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57


வீடு மற்றும் வாகன காப்புறுதி
HOME & AUTO INSURANCE
வீடு
HOME
வாகனம்
AUTO
மோட்டர் சைக்கிள்
MOTOR CYCLE
படகு
BOAT
கனரக வாகனம்
TRAILER
காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்
TR
FORTUNE FAVOURS THE BOLD
CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653



U Star Art
Get an Exclusive Offer With an Exciting Package!
All In One Place
U Star Art
Priya Uthayan
(416) 897-5816
647-945-7212
Our Services
• Bridal Makeup
• Bridal Saree Blouse
• Bridesmaid Saree Blouse
• Flower Girls Dress
• Cake Decorating
• Rich Cake

EELANADU 10 June 2022 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். ராசியாதிபதி செவ்வாய் சஞ்சாரத்தால் வீண் பகை உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் தேவையற்ற இடர்பாடுகள் அகலும். பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. கடன் கொடுக்கும் போதும், வாங்கும் போதும் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், கூடுதல் உழைப்பும் இருக்கும். பொறுப்புகள் அதிகரிக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு வன்மையால் சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பெயரும், புகழும் கூடும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். இதுவரை இருந்த தொய்வு நீங்கி லாபம் அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்க வைத்து கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி தேடி வரும்.




மிதுனராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்படும். காரியங்களில் தாமதம் உண்டாகும். கண் மூடித்தனமாக எதையும் செய்யாமல் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் இருந்த தடைகள் உடையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். தாய், தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்யும் மனப்பான்மை அதிகரிக்கும்.விழிப்புடன் இருப்பது நல்லது. சுப செலவுகள் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் சுமூகமாக செல்வது நல்லது. வேலையை விட்டு விட்டு வேறு வேலைக்கு செல்லலாமா என்று கூட தோன்றலாம்.




சிம்மராசி அன்பர்களே! அதிமுக்கிய காரியங்கள் சுபமாக நடக்கும். மனோதிடம் அதிகரிக்கும். பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வாகனம் வாங்க எடுத்த முயற்சி கைகூடும். பயணங்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீடு மனை சார்ந்த வழக்குகளில் ஆதாயம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும்.




கன்னிராசி அன்பர்களே! பல வகையிலும் நற்பலன்கள் தேடி வரும். தெய்வபக்தி அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மனதில் சுய நம்பிக்கை அதிகரிக்கும். வாக்கு கொடுக்கும் முன் பார்த்து கொடுக்கவும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். வேலையில் மாற்றம் உண்டாகலாம்.





துலாம் ராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த காரிய தடைகள் நீங்கும். பணவரத்து திருப்தியாக இருக்கும். வீண் பிரச்சினைகள் நீங்கும். மரியாதை அந்தஸ்து உயரும். வெளிநாட்டு பயணங்கள் கைகூடும். தொழில் வியாபார சிக்கல்கள் நீங்கி நன்கு நடைபெறும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு புதிய பதவி கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம்.





விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் சாதகமாக முடியும். துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை தரும் காலகட்டமாக அமையும். மனதில் மகிழ்ச்சியான எண்ணங்கள் வரும். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். வாகனங்கள் வாங்குவதில் இருந்த தடை நீங்கும். திருமண முயற்சிகள் கைகூடும். வழக்குகளில் சுமூக முடிவு வரும்.








தனுசுராசி அன்பர்களே! எதிர்ப்புகள் விலகும். பயணம் மூலம் நன்மை கிடைக்கும். செய்யும் காரியங்களால் பெருமை ஏற்படும். புத்திசாதுரியம் கூடும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான நிலை காணப்படும். வியாபார நிமித்தமாக பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையான பேச்சால் வெற்றி பெறுவர்.




மகரராசி அன்பர்களே! திடீர் மனக்கவலை உண்டாகும். எதிர்பாராத செலவு ஏற்படும். முயற்சிகளில் தடை ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். இருக்கும் இடம் விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரத்தில் போட்டியை சந்திக்க வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் கடுமையான பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்யோகத்தில் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்கள் அகலும். எந்த காரியத்திலும் சிறிது முயற்சி செய்தால் வெற்றி பெறலாம். வாகனத்தால் லாபம் ஏற்படும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சிறப்பான பலன் கிடைக்க பெறுவார்கள்.




மீனராசி அன்பர்களே! மனதில் உறுதி பிறக்கும். எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். திட்டமிடாத செயல்களால் வீண் செலவு உண்டாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டி இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பட்டினியை நோக்கி....

(15ம் பக்கத் தொடர்ச்சி) இரசாயன உரத்தை அனுமதித்தது. ஆனால் மானியத்தை நிறுத்தியது. மேலும் இரசாயன உர விநியோகத்தை தனியாரிடம் ஒப்படைத்தது. ஆனால் டொலர் பிரச்சினையால் திட்டமிட்டபடி இரசாயன உரத்தை கொண்டு வரமுடியவில்லை. இப்பொழுது இந்தியாவில் இருந்து பெறக்கூடிய உரத்துக்காக விவசாயிகள் காத்திருக்கிறார்கள். அந்த உரத்தில் இருக்கக்கூடிய நைட்ரஜனின் அளவு போதாது என்ற ஒரு சந்தேகமும் உண்டு. எதுவாயினும் அந்த உரம் இம்முறை கால போகத்துக்குள் வந்து சேராது என்று விவசாயிகள் அச்சமடைகிறார்கள். இம்முறை கால போகத்திற்கு ஒப்பீட்டளவில் பிந்தி விதைத்த விவசாயிகள் கிட்டதட்ட 30 நாட்களுக்குள் உரம் கிடைத்தால் விளைச்சலில் மாற்றத்தை காட்டலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் அதற்கான வாய்ப்புகள் குறைவாகவே தெரிகின்றன

அதேசமயம் கள்ளச்சந்தையில் உரம் ஒரு பை 45000 ரூபாய் போகிறது. அந்த விலைக்கு உரத்தை வாங்கி கமம் செய்த ஒரு விவசாயி எந்த விலைக்கு நெல்லை விற்பார்? இப்பொழுது நெல் ஒரு கிலோவின் விலை 200 ரூபாய்க்கும் அதிகமாக போகிறது. இரசாயன உரம் நிறுத்தப்படமுன்பு அரசாங்கம் மானிய விலையில் 350 இலிருந்து 450 ரூபாய் வரையிலும் ஒரு உரப்பையை வழங்கியது. அப்பொழுது நெல்லின் விலை ஒரு மூட்டை ஆயிரம் வரை போனது. ஆனால் இப்பொழுது நெல்லின் விலை ஒரு மூட்டை 10 ஆயிரத்தை கடந்து வருகிறது. இந்நிலையில் கள்ளச் சந்தையில் உரத்தை வாங்கி பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயி எந்த விலைக்கு நெல்லை விற்பார்? அந்த விலைக்கு நெல்லை வாங்க நடுத்தர வர்க்கத்தாலும் முடியாது போகலாம் என்பதை இக்கட்டுரையின் தொடக்கத்தில் பார்த்தோம். அப்படியென்றால் ஏழைகளின் பாடு எப்படியிருக்கும்? குறிப்பாக தமிழ் மக்கள் என்ன செய்ய போகிறார்கள்?

தமிழ் மக்கள் இயல்பாகவே சேமிக்கும் பழக்கம் உடையவர்கள். இப்பொழுதும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மணித்தியாலக் கணக்காக வரிசையில் நின்று மோட்டார் சைக்கிளின் வயிறு முட்ட பெட்ரோலை நிரப்பி கொண்டு வந்து வீட்டில் அதை குழாய் மூலம் உறிஞ்சி எடுத்து போத்தல்களில் சேமிக்கும் பலரைக் காணலாம் .தமிழ்மக்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்த காரணிகளில் முக்கியமானது சீதனம். தவிர இயல்பாகவே முன்னெச்சரிக்கை உணர்வு மிக்க மக்கள்.

குறிப்பாக யுத்த காலத்தில் அந்த முன்னெச்சரிக்கை உணர்வு சேமிப்பு பழக்கத்தை மேலும் ஊக்குவித்தது. இப்பொழுது பொருளாதார நெருக்கடியின் பொழுதும் தமிழ் மக்களை பாதுகாக்க போவது, அல்லது தமிழ்மக்கள் ஓரளவுக்காவது சமாளித்துக் கொண்டு தப்பிப் பிழைக்க காரணமாக அமையப் போவது அவர்களுடைய சேமிப்பு பழக்கம் தான். இது முதலாவது

இரண்டாவதாக, தமிழ்ப் பொருளாதாரத்தின் ஒரு பகுதி வெளிநாட்டு காசில் தங்கியிருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் அனுப்பும் பணம் இப்பொழுது டொலரின் பெறுமதி காரணமாக பல மடங்காகப் பெருகி வருகிறது. எனவே அதுவும் தமிழ் மக்களுக்கு ஒரு பலந் தான்.

எனினும், அதற்காக தமிழ் மக்கள் சும்மாயிருக்கக் கூடாது. ஒரு நெருக்கடியை முன் அனுமானித்து முன்னெச்சரிக்கையோடு சேமிப்பை அதிகப்படுத்த வேண்டும். தானியங்களைச் சேமிக்க வேண்டும். வீட்டுத்தோட்டத்தில் அக்கறை காட்ட வேண்டும். தமிழ் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் இது தொடர்பாக தமிழ் மக்களுக்கு அறிவூட்ட வேண்டும். நம்பிக்கை ஊட்ட வேண்டும். ரணில் விக்கிரமசிங்க கூறியது போல உணவு நெருக்கடி ஒன்று வரலாம் வராமலும் போகலாம். ஆனால் அதை நோக்கி தமிழ் மக்களைத் தயார்படுத்த வேண்டிய ஒரு பொறுப்பு கட்சிகளுக்கும் செயற்பாட்டு அமைப்புக்களுக்கும் அதிகாரிகளுக்கும் உண்டு.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் அவ்வாறான முன்னாயத்த நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.தமிழ்ப் பண்பாட்டில் ஏற்கனவே புழக்கத்தில் காணப்பட்ட சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்க தொடங்கியுள்ளது. தமிழ்ப் பாரம்பரியத்தில் ஏற்கனவே காணப்பட்ட சிறு தானியங்களுக்கு இராச தானியம் என்ற பெயரை வழங்கி ஒரு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அச்சுவேலி பத்தமேனி பகுதியில் இடம்பெற்றது. இதில் விவசாயிகளுக்கு இலவசமாக சிறு தானியங்கள் வழங்கப்படும். அவர்கள் அறுவடை முடிந்ததும் தமக்கு வழங்கப்பட்ட விதை தானியத்துக்குப் பதிலாக அதன் இரண்டு மடங்கு தானியத்தை பசுமை இயக்கத்துக்கு வழங்க வேண்டும். அது மீண்டும் மறு சுழற்சிக்கு வழங்கப்படும். தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆர்வமுடைய தரப்புக்களும் மேலும் புதிய வித்தியாசமான திட்டங்களையும் யோசிக்கலாம்.

தமிழ் மக்கள் உடனடியாக முன்னாயத்த நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இப்பொழுது உயிர் பிழைத்திருக்கும் பெரும்பாலான தமிழர்கள் போரினால் உமிழ்ந்து விடப்பட்டவர்களே.போர்க்கால அனுபவம் எல்லா நெருக்கடிகளின் போதும் தமிழ் மக்களுக்கு உதவும். எனினும்.தமிழ் மக்கள் வருமுன் காக்க வேண்டும்.

# தியாகங்களின் வெகுமதி

(5ம் பக்கத் தொடர்ச்சி) நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொள்ளலாமா? யுத்தம் நிறைவுற்று பதின்மூன்றாண்டுகளாகி விட்டன. ஆகக் குறைந்தது நமக்குள், ஒரு ஐக்கிய முன்னணியைக் கூட நம்மால் உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. இப்பொழுதும் மக்களின் நலன் கருதிய விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் அரசியல் கட்சிகளால் ஒன்றுபட்டு செயல்பட முடியவில்லை யென்றால், தியாகங்களைப் பற்றி பிரஸ்தாபிப்பதில் என்ன பொருளுண்டு? ஆகக் குறைந்தது, கட்சிகளின் பெயரால், தியாகங்களை கொச்சைப்படுத்தாமலாவது இருக்க முயற்சிக்கலாம்.

# 21ஐ ஏற்க முடியாது! எம்மவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியமைக்கு பொதுமக்களும் பொறுப்பு! - பசில்

(5ம் பக்கத் தொடர்ச்சி) அதாவது 2015 ஆம் ஆண்டு நான் பல்வேறு ஊழல்கள் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டதாக வழக்கு தொடரப்பட்டது. பல வருடங்களின் பின்னர் கடந்த வாரம் அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டேன். அந்த வழக்குகளை எதிர்கொள்வதே எனது முதல் எதிர்பார்ப்பாக இருந்தது.”

இரண்டாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் தோல்விக்கு நான் பொறுப்பேற்க விரும்பினேன். அவரது தலைமையின் கீழ் அவருக்கு வெற்றியை வழங்க விரும்பினேன். அந்த இரண்டு எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்பட்டன. அதைத் தவிர, நிதியமைச்சர் பதவி கிடைக்கும், நாடாளுமன்றத்துக்கு வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததில்லை. அவ்வளவுதான்.

## உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GTM GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
HOMELIFE
HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON-M1X 0C3
(Markham /McNicoll)
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
KABIS
KABIS & ASSOCIATES INC.
416-357-2847
kulasingam33@yahoo.ca
• Life Insurance
• Critical Illness
• RESP
• Disability
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
IA INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.